# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 6 வெள்ளிக்கிழமை (21-07-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:168


## தீர்வு யோசனை குறித்து ஆராய மஹரகமவில் பிக்குமார் மாநாடு!

கொழும்பு,ஜூலை21

அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகள் குறித்து ஆராய எதிர்வரும் முதலாம் திகதி மஹரகமவில் பிக்குமார் மாநாடு ஒன்று நடத்தப்படவுள்ளது.

பௌத்த பீடாதிபதிகளின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த சுமார் 2500 பிக்குகள் கலந்துகொள்வர் என்று தேசிய பிக்குமார் சபைத் தலைவர் மாதுருவாவே சோபிததேரர் தெரிவித்துள்ளார்.

அரசினால் தற்போது முன்வைக்கப்பட்டிருக்கும் உத்தேச அரசமைப்புச்சீர்திருத்த யோசனைகளால் நாட்டுக்கு ஏற்படவுள்ள பாதிப்புக்கள் குறித்து மக்களுக்கு அறிவுறுத்தவே இந்த மாநாடு கூட்டப்படுவதாகவும் சோபிததேரர் மேலும் சொன்னார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பௌத்த மதத்துக்கு முதலிடமளித்து அதனைப் பாதுகாக்க வேண்டும் என்ற சரத்தை உத்தேச அரசமைப்பினூடாக நீக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக அறிகிறோம். எனவே அதற்கு ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது.

உத்தேச அரசமைப்புச் சீர்திருத்தங்கள் குறித்து அரசாங்கம் அரசியல் கட்சிகள், வெளிநாட்டுத் தூதர

(12ஆம் பக்கம் பார்க்க)

## தலையாழிச் சம்பவத்தை அடுத்து கைதான இருவரும் நேற்று விடுவிப்பு!

யாழ்ப்பாணம்,ஜூலை21

கடந்த 13ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவன் கொக்குவில் தலையாழிப் பகுதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட சமயம் அப்பிரதேசத்தில் கைது செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட இருவரும் நேற்று நண்பகல் விடுவிக்கப்பட்டனர்.

பனை, தென்னைவள கூட்டுறவுச் சங்கங்களின் வலிகாமக் கொத்தணித் தலைவர் நா.கணேசன், அதன் பதில் பொது முகாமையாளர் க.சுதர்சன் ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்களாவர்.

தாவடி படைமுகாமில் கிராம சேவையாளர்கள் முன்னிலையில் வைத்து அவர்கள் இருவரும் விடுவிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட இருவரும் வலி. மேற்குப் பிரதேசசபைத்தலைவர் என். திரிலோகநாதனை சந்தித்தனர்.

தமது விடுதலைக்கு உதவியமைக்காக அவருக்கு இவர்கள் நன்றி கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

### அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகள்

# தேக்க நிலையை போக்கும் முயற்சியாக தமிழ்க் கட்சிகளுடன் மீண்டும் பேச்சு!

## ஐ.தே.கவுடனும் ஜனாதிபதி இன்று சந்திப்பு

கொழும்பு,ஜூலை21

**புதிய அரசமைப்பு யோசனைகள் தொடர்பாக ஏற்பட்டுள்ள தேக்க நிலையைப் போக்கும் முயற்சியாக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இன்று மீண்டும் தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்தவுள்ளார்.**

**இதேவேளை, அரசு - ஐ.தே.க. - தமிழ்க்கட்சிகள் முத்தரப்புப் பேச்சுக்கு முன்னோடியாக ஐக்கிய தேசியக் கட்சிப் பிரதிநிதிகயையும் ஜனாதிபதி இன்று சந்தித்துப் பேசுவாரென அறிவிக்கப்பட்டுள்ளது.**

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடல்களின் பயனாக எட்டப்பட்ட உடன்பாட்டில் காணப்பட்ட மூன்று விடயங்களைத் தமிழ்க் கட்சிகள் நிராகரித்து இருந்தன.

இதன் காரணமாக ஏற்பட்டுள்ள தேக்க நிலையை நீக்கி முயற்சிகளை முன்னெடுக்கும் வகையில் இன்றைய பேச்சுக்கள் இடம்பெறுகின்றன.

முற்பகல் 11மணிக்கு வருகை தருமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி, புளொட் ஆகிய

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிரனேட் வெடித்து இருவர் காயம்

நெல்லியடி,ஜூலை21

வல்லை சோதனைச் சாவடியில் நேற்று முற்பகல் கிரனேட் வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவரும் பொதுமகன் ஒருவரும் காயமடைந்தனர். கரவெட்டியைச் சேர்ந்த கனகசபை கிருபாகரன்(வயது 26) என்பவரே காயமடைந்த பொதுமகனாவார்.

படையினர் வசமிருந்த கிரனைட்டே தவறுதலாக வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-5-9-10-109-173)

## சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை21

நவாலிப்பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற சம்பவமொன்றில் பலியானதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவரின் சடலம் சுன்னாகம் பொலீஸாரினால் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இளைஞனின் சடலம் அடையாளம் காண்பதற்காகவும் மரணவிசாரணையின் பொருட்டும் யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(இ-5-9-15)

## ரணிலுடன் டக்ளஸ் சந்திப்பு

கொழும்பு,ஜூலை 21

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் எட்டப்பட்ட உடன்பாட்டில் தமிழ் மக்களுக்கு எதிராக உள்ள அம்சங்களில் மாற்றங்கள் செய்வது தொடர்பாக ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்று முன்தினம் கலந்துரையாடினார்.

நேற்று முன்தினம் மாலை 7.30 மணி முதல் மூன்றுமணிநேரம் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பான விவரங்கள் வெளிவரவில்லை.

(இ-3)

## பயணிகள் கப்பல் வருகிறது

யாழ்ப்பாணம்,ஜூலை21

திருகோணமலையிலிருந்து ஒரு தொகுதி பயணிகளுடன் 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் பருத்தித்துறை நோக்கி நாளை புறப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

நாளை மறுதினம் வந்து சேரும் இந்தக் கப்பல் ஒரு தொகுதி பயணிகளுடன் திங்கட்கிழமை திருமலை நோக்கிப் புறப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## பொலீஸ் நிலையத்தை நோக்கி மோட்டார்த் தாக்குதல்

### வாழைச்சேனையில் சம்பவம்

கொழும்பு,ஜூலை21

வாழைச்சேனைப் பொலீஸ் நிலையப்பகுதியில் விடுதலைப் புலிகள் நேற்று முன்தினமிரவு 9 மணியளவில் மோட்டார் தாக்குதல் நடத்தியுள்ளனர் எனச் செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப்புலிகள் ஏவிய மோட்டார்கள் பலவும் பொலீஸ் நிலையத்துக்கு வெளியே விழுந்து வெடித்ததாகவும் -

இதனால் பொலீஸார் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

பொலீஸ் நிலையத்துக்குச் சற்றுத் தொலைவிலுள்ள கறுவாங்கேணிப் பகுதியில் இருந்தே விடுதலைப்புலிகள் இந்தத் தாக்குதலை நடத்தினர் எனவும் -

பொலீஸார் பதில் தாக்குதல் நடத்தி இத்தாக்குதலை முறியடித்தனர் எனவும் - கூறப்பட்டது.(இ-7)

## நல்லூர் செட்டித்தெருவில் நேற்றுக்காலை ஷெல்வீச்சு

### மூவர் காயம் அடைந்தனர்

யாழ்ப்பாணம்,ஜூலை21

நல்லூர் செட்டித்தெரு பகுதியில் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இரு ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. இந்த ஷெல்களினால் அருகருகே இருந்த இரு வீடுகளைச் சேர்ந்த மூவர் காயமடைந்ததுடன் அந்த வீடுகளும் சேதமடைந்தன. வளவு ஒன்றில் கட்டப்பட்டிருந்த ஆடு ஒன்றும் காயமடைந்தது.

இதே இடத்தைச் சேர்ந்த திருமதி க.சீதாலட்சுமி (வயது52) மற்றும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இடர்காலக் கொடுப்பனவுக்கு ரூபா 18 கோடி

திருகோணமலை,ஜூலை21

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் அதிபர்களுக்கான சம்பள நிலுவை,ஆசிரியர்களுக்கான இடர்காலக் கொடுப்பனவு ஆகியவற்றுக்காக 18 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக் குழுவுக்கும் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநருக்குமிடையில் நடந்த பேச்சுக்களை அடுத்து -

ஆளுநர் எடுத்த நடவடிக்கையின் காரணமாக இந்த ஒதுக்கீட்டை திறைசேரி வழங்கியுள்ளது.

நேற்று இரவுவரை இந்த நிதிக்கான காசோலை வந்து சேரவில்லை என்று மாகாண கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

## கடலில் காணாமற்போன ஆறு பேர் பற்றிய விவரம்

மன்னார்,ஜூலை21

கடந்த திங்கட்கிழமை இந்திய மீன்பிடிப் படகிலிருந்து கடலில் தூக்கிப் போடப்பட்ட 12 பேரில் காணாமல்போன 6 பேர் தொடர்பான விவரங்கள் வெளியாகி உள்ளன.

ஏற்கனவே நான்கு பெண்கள் கரை ஒதுங்கியுள்ளனர் தற்சமயம் காணாமல் போன ஆறு பேரின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. மற்றும் இருவர் தொடர்பான விவரம் ஏதும் வெளியாகவில்லை.

அறுவரின் விவரம் வருமாறு:-

★ சோ.லூர்த்தம்மா(வயது70-பருத்தித்துறை),

★ அவரது பேர்த்தியான செல்வேந்திரன் விஜிதா (வயது 11)

★ சிவானந்தகுமார்(வயது28-திருகோணமலை)

★ அவரது மகனான லக்மன் (வயது 3)

★ ஜோன்சன் ஜெனீட்டஸ் (வயது 07 - குருநகர்)

★ மயில்வாணன் மனோகரன் (ஓமந்தை)

(ஜோன்சன் ஜெனீட்டஸ் என்ற சிறுவனின் தா[illegible] அளித்த பேட்டி 4ஆம் பக்க[illegible] (இ-3).

## வவுனியாவில் பஸ் எரிப்பு!

வவுனியா,ஜூலை21

வவுனியாவுக்கும் - உக்குலாங்குளத்துக்குமிடையில் சேவையிலீடுபடும் போக்குவரத்துச் சபையின பஸ் ஒன்று நேற்றுக்காலை 6.15 மணியளவில் உக்குலாங்குளத்தில் வைத்து தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

பாடசாலை பஸ் சேவை நடத்தும் இந்த பஸ் பாடசாலை மாணவர்களையும் பொது மக்களையும் ஏற்றிக் கொண்டு வவுனியா நேக்கிப் புறப்பட்டதாகவும் -

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

மானிப்பாய் வட்டம் / இணுவில் /சாவகச்சேரி

லயன்ஸ் கழகங்கள் இணைந்து நடத்தும்

We Serve

க.பொ.த(உயர்தரம்) ஒகஸ்ட் - 2000

## வணிகப் பிரிவு மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் உதவியுடன் நடத்தப்படுகின்றது.

**இடம்:- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை**

**காலம்:- 23.07.2000(ஞாயிறு) காலை 9.00 மணி (S.L.T)**

9.00 ~ 10.30 வணிகக்கல்வி
10.30 ~ 12.00 கணக்கீடு
12.00 ~ 1.30 பொருளியல்

அனைத்து மாணவர்களையும் குறிப்பாக இடம்பெயர்ந்த மாணவர்களையும் பங்குபற்றி பயன்பெற வேண்டுகின்றோம்.

சேவை பிரசுர உதவி:-
BITSMANS INSTITUTES, MANIPAY.

(76586)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"
(யோவா 11:25)

அன்னை மடியில்
1930 - 04 - 06



ஆண்டவன் அடியில்
2000 - 06 - 22

அமரர்

### வைத்தியகலாநிதி கபிரியேல் ஜோர்ஜ்

(D.A.M.R.I.M.P. J.P)

பெரு நகராம் சுன்னாகம் தனிலுதித்த தாரகையே
அருமருந்து ஈய்ந்து உயிர்காத்த பெரும் உத்தமரே
ஞானமலர்க் கரம் பிடித்து ஏழு புதல்வரீன்ற குலவிளக்கே
ஆறைந்து திங்களுமே கடந்ததோ நின் உரு மறைந்து
ஆனாலு மாறாது எமதுள்ளத் துயரிங்கு
மீளாதோ உனதுயிர் ரென ஏங்கும் இங்கு என்றும்
நித்தியமாய் உயிர் பெற்று இறைபதம் இன்புற்று
இளைப்பாற வேண்டுகிறோம் நாமிங்கு எந்நாளும்

இவரது ஆன்ம இளைப்பாற்றுக்காக நாளை (2000.07.22) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும். இத் திருப்பலியிலும் தொடர்ந்து இவரில்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து இவரது ஆன்ம இளைப் பாற்றுக்காக வேண்டும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை)

எமது அன்புத் தந்தையாரின் திடீர் மறைவினால் நாம் தவித்து நின்ற வேளையில் எமக்குப் பலவழிகளில் உத வியவர்கள், ஆறுதலளித்தவர்கள் அனைவரையும் நாம் நன்றியுணர்வுடன் நோக்குகின்றோம்.

அன்னாரின் மறைவின் போது வீட்டுக்கு வருகை தந்த பெரியார்கள், நண்பர்கள், உறவினர், வைத்தியத்துறையில் அவரால் நன்மை பெற்றவர், மலர்வளையம் சாத்தியோர், துண்டுப் பிரசுரங்கள் மூலம் அஞ்சலித்த கழகங்கள், தனிப் பட்டவர்கள். அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய பெரியார் கள், தந்திகள் மூலம் தம் அனுதாபங்களைத் தெரிவித்தோர், தொலைபேசிமூலம் தம் அனுதாபங்களை வழங்கியோர், நினைவு மலருக்கு ஆசிச்செய்தி வழங்கிய யாழ்.ஆயர் அதி.வண.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களுக் கும், கட்டுரைகள் வழங்கியோர், அட்டைப் படம் அச்சிட்ட பிள்ளையார் அச்சகத்தினருக்கும் மற்றும் திருவள்ளுவர் அச்சகத்தினருக்கும் மற்றும் இன்றுவரை எமக்குத் தம் வார்த்தைகளினாலும், செயற்பாடுகளினாலும் எமதில்லம் வந்து ஆறுதல் தருபவர்கள் யாவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

Dr. சுப்பிரமணியம் றோட்,
சுன்னாகம்.

தகவல்:
**குடும்பத்தினர்**

(76569)

NOTICE
UNIVERSITY OF JAFFNA,
SRILANKA
FACULTY OF MEDICINE

ORIENTATION PROGRAMME

The Orientation Programme for the New Admissions (1999 and 2000 Batches) will commence on 4th September 2000.

*Registrar.*

(C/12283)

பாதுகாப்பான சூழலில்
I.B.S கல்வி நிறுவனம்
கோயில் வீதி, யாழ்.
(ரெயில் கடவை அருகில்)
தரம் 5 முதல் O/L வரை
எல்லா மாணவர்களையும்
SUN 9.00am சமுகமளிக்கவும்
(76587)

ராஜா
(யாழ்ப்பாணம்)
பிரபுதேவா, ரோஜா, சரத்குமார், கபாலி மற்றும் பலர் நடிப்பில் இனிய பாடல்கள் நிறைந்த
இந்து
புதிய நேரம் 10.30, 2.00
24-07-2000 முதல்
கண்ணுக்குள் நிலவு
(C/12268)

நாகம்ஸ்
(சுன்னாகம்)
ரஜனி, சௌந்தர்யா, சிவாஜி, ரம்யாகிருஷ்ணன் நடிப்பில
படையப்பா
(றீல்ஸ்)
காட்சிகள்:-
11.00, 2.30
(புதிய நேரம்)
(C/12232)

### ஜே.வி.பி ஆர்ப்பாட்டம்

அத்தியாவசியப் பொருள்களுக் கான விலை உயர்வைக் கண்டித்து ஜே.வி.பி நேற்று முன்தினம் மாலை கொழும்பில் ஆர்ப்பாட்டம்ஒன்றை நடத்தியது. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசாங்கத்தை பதவி விலகக் கோரும் சுலோகங்கள் அடங்கிய பதாகைக ளைச் சுமந்திருந்தனர்.

(ஐ-7)

### செஞ்.துணையுடன் கப்பல் சேவை

தற்போது யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டிருக்கும் 'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பலை செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் கொடி, மற்றும் வழித்துணையுடன் நடத்துவது குறித்து பேச்சுக்கள் நடைபெற்றுவருவதாக அதிகாரி ஒரு வரை மேற்கோள்காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது. (உ)

## ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானம்

ஆடிவேல் விழா பிராயச்சித்த அபிஷேகத்தின்போது
இன்று (21-07-2000) வெள்ளி 4.30 மணிக்கு (புதிய நேரம்)
**இசைக்கச்சேரி நடைபெறும்.**

உயர்திரு. S.பத்மலிங்கம் - பாட்டு
உயர்திரு. U.ராதாகிருஷ்ணன் - வயலின்
உயர்திரு. S.துரைராஜா - மிருதங்கம்

(76584)

*தேவஸ்தானம*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கோப்பாய்ப் பிரிவுச் செயலாளரும் சமூக சேவையாளரும் ஆவரங்காலில் பிறந்தவரும் நாயன்மார்கட்டு, பாரதி வீதியில் வசிப்பவருமான

### உயர்திரு. இ.மயில்வாகனம் (J.P)

(பிரதம தபாலகம் - யாழ்ப்பாணம்)

மனிதனை அளவு செய்யும் பதவி - இங்கே
பதவியை அளவு செய்யும் மாமனிதன் நீங்கள்
உதவியைக் கோரும் மாந்தர் முன்னே
உவப்புடன் சேவை செய்த செம்மல்
சமத்துவம் பேணிக்காக்கும் சமாதான நீதிவானாய்
இருத்துவோம் தொண்டு செய்ய உன்னை.

இன்றுபோல் என்றும் உன்பணி தொடர
வாழ்த்தும் நண்பர்கள்

சி. தங்கவேல்
(ஓய்வு பெற்ற அதிபர்)
*அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை.*

வி.சிவலிங்கராசா
(அதிபர்)
*வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாசாலை.*

(C/12274)

## தென்மராட்சி மக்களுக்காக விசேட பூஜைகளும் பிரார்த்தனைகளும்

**காலம்: இன்று (21-07-2000) வெள்ளிக்கிழமை**
**பின்வரும் ஆலயங்களில் நிகழ்வுறும்**

| | | |
|---|---|---|
| சுழிபுரம் பறாளாய் பிள்ளையார் கோவில் | காலை | 6.00 மணி |
| தொல்புரம் வடக்கம்பரை கோவில் | காலை | 7.15 மணி |
| அராலி நொச்சியம்பதி விநாயகர் ஆலயம் | காலை | 7.00 மணி |
| வட்டுக்கோட்டை துறட்டிப்பனை முத்துமாரிஅம்மன் | காலை | 8.30 மணி |
| நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் | காலை | 9.30 மணி |
| யாழ். சத்திரம் ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம் (கலச அபிஷேகம், அன்னதானம்) | மு.ப. | 10.00 மணி |
| ஸ்ரீ பாலகதிர்காமம், நல்லூர் | பி.ப | 1.00 மணி |
| ஈவினை மீனாட்சி அம்மன் கோவில் | பி.ப | 2.00 மணி |
| ஏழாலை இலந்தைகட்டி ஸ்ரீ பாதாள வைரவர் | பி.ப | 2.30 மணி |
| நெல்லியடி ஸ்ரீ காளி அம்பாள் தேவஸ்தானம் | பி.ப | 3.30 மணி |
| வட்டுக்கோட்டை ஆத்தியடி பிள்ளையார் கோவில் | மாலை | 4.00 மணி |
| பருத்/தம்பசிட்டி பண்டாரி அம்பாள் கோவில் | மாலை | 4.30 மணி |
| திக்கம் மடத்துவாசல் பிள்ளையார் கோவில் | மாலை | 5.30 மணி |
| அல்வாய் மேற்கு துளாய் பிள்ளையார் | மாலை | 6.30 மணி |

**மேற்படி ஆலயங்களில் நிகழ்வுறும் பிரார்த்தனைகளில் பங்கு கொண்டு தென்மராட்சி மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப அனைவரும் பிரார்த்திப்போம்**

**பண்டிதர் சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்**
(புன்னாலைக்கட்டுவன்)

யாழ்ப்பாணக் கல்லூரி வீதி,
வட்டுக்கோட்டை.

தென்மராட்சி மக்கள் நலன் பெறப் பிரார்த்திப்பவர்

**அம்பிகை களஞ்சியம்**

304 (110), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (76556)

## ஜெருசலேம் அந்தஸ்துக் குறித்துச் சிக்கல்;

# இஸ்ரேல் - பலஸ்தீன தலைவர்களின் காம்ப்டேவிட் பேச்சு முறிந்தது!

### சமாதான நடவடிக்கைகளைத் தொடர அமெரிக்கா முயற்சி

வாஷிங்ரன், ஜூலை 21

பலஸ்தீனப் பிரச்சினை தொடர்பாக அமெரிக்காவின் காம்ப் டேவிட் நகரில் நடைபெற்ற இஸ்ரேல், பலஸ்தீனத் தலைவர்களிடையேயான பேச்சுவார்த்தை உடன்படிக்கை ஏதும் எட்டப்படாத நிலையில் முறிவடைந்தது.

ஜெருசலேமை விட்டுக்கொடுக்க இருதரப்பும் மறுத்ததைத் தொடர்ந்தே இந்த நிலைமை ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

''ஜெருசலேமை இஸ்ரேல் விட்டுக்கொடுக்காது. அது எவருடனும் பங்கிடமுடியாத தலைநகரம்'' என்று இஸ்ரேல் பிரதமர் எகுட்பராக் தெரிவித்ததாகவும் —

அதேசமயம் —

''இஸ்ரேலால் ஆக்கிரமிக்சப்பட்டதே தவிர ஜெருசலேம் பலஸ்தீனருக்கே சொந்தமானது'' என்று பலஸ்தீனத் தலைவர் யசீர்அரபாத் உறுதியாகக் கூறியதாகவும் —

தகவல்கள் தெரிவிக்கின்றன:

இதனால் 100 ஆண்டுகளுக்கு மேலாக நிலவிவரும் பலஸ்தீனப் பிரச்சினையில் தீர்வை ஏற்படுத்தும் என்று நம்பப்பட்ட காம்ப் டேவிட் பேச்சுவார்த்தை தடை ஏற்பட்டு விட்டது.

இந்த நிலையில் பில் கிளின்ரன் ஜப்பான் செல்வ

உலக அரங்கில்

தால் அமெரிக்க வெளியுறவுத் துறைச் செயலர் மெடலின் அல்பிரைட் தலைமையில் பலஸ்தீனம் மற்றும் இஸ்ரேலியத் தலைவர்களைத் தொடர்ந்தும் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ள வைக்கும் முயற்சிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. (ஐ-ஒ)

### தூதர் வாபஸ்

றாபாட், ஜூலை 21

கட்டாரிலிருந்து தனது தூதரை திருப்பி அழைக்க மொராக்கோ முடிவு செய்துள்ளது.

கட்டார் அரசின் அரசியல் மாற்றங்களால் ஏற்பட்ட அதிருப்தியினாலேயே மொராக்கோ இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

(ஐ-3)

### ஜெருசலேமே தீராத சிக்கல்

இயேசு பிறந்த புனிதத் தலமான ஜெருசலேம் பலஸ்தீனப் பிரச்சினை திர்க்க முடியாத சிக்கலாகவே தொடர்ந்து இருந்து வருகிறது.

1949 இல் இஸ்ரேல் உருவான போது ஜெருசலேம் அதன் தலைநகர் ஆக்கப்பட்டது. அப்போது அரபு நாடுகளுடன் இஸ்ரேல் நடத்திய யுத்தத்தில் ஜோர்டான் ஜெருசலேமின் கிழக்குப் பகுதியைக் கைப்பற்றிக் கொண்டது. மேற்கு ஜெருசலேம் இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் தொடர்ந்து இருந்தது. அதன்பின் 1967 இல் மீண்டும் இஸ்ரேல் போரிட்டு ஜெருசலேம் முழுவதையும் தனது சொந்தமாக்கியது.

இதன்பின்னர் ஜெருசலேமை பலஸ்தீனியர் இஸ்ரேலிடம் இருந்து தமது இராஜ்ஜியத்திற்குள் சேர்க்க கடும் பிரயத்தனம் செய்து வருகின்றனர். ஆனால் இஸ்ரேலோ 'உன்னால் முடிந்ததைப்பார்' என்று ஜெருசலேமை உடும்புப் பிடியாகப் பிடித்து வைத்துள்ளது. (ஐ-ஒ)

# மசகுஎண்ணெய் ஆற்றில் கலந்து ஏராளமான உயிரினங்கள் பலி!

பிறேசிலியா, ஜூலை 21

பிறேசிலில் சுத்திகரிக்கப்படாத மசகு எண்ணெய் ஆற்றில் கலந்ததால் மீன்கள், பறவைகள் உட்பட ஏராளமான உயிரினங்கள் உயிரிழந்தன. அத்துடன் குடிதண்ணீர் பயன்பாடும்பாதிப்படைந்துள்ளது.

150 மைல் நீளமான நதி ஒன்றின் கரைப் பகுதியை ஒட்டி அமைந்திருந்த பெற்றோல் சுத்திகரிப்பு நிறுவனமொன்றில் பல லட்சம் லீற்றர் மசகு எண்ணெய் தேக்கி வைக்கப்பட்டிருந்த தாங்கி உடைந்ததால், அதிலிருந்த மசகு எண்ணெய் முழுவதும் தரையில் ஓடி ஆற்றில் கலந்தது.

கவனக் குறைவால் இது ஏற்பட்டதால் பெற்றோலிய நிறுவனத்திற்கு 30 மில்லியன் டொலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

எண்ணெய் கலந்ததால் ஏற்பட்ட பாதிப்புகளை அகற்றி ஆற்றில் உள்ள உயிரினங்களைக் காப்பாற்றும் நடவடிக்கையில் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள். (ஒ)

# சிவசேனைத் தொண்டர்கள் தொடர்ந்துவன்முறைத்தாக்குதல்

புதுடில்லி, ஜூலை 21

டில்லி உட்பட பல முக்கிய நகரங்களில் சிவசேனைத் தொண்டர்கள் தொடர்ந்து வன்முறைத் தாக்குதல்களை நடத்தி வருகின்றார்கள். அந்த அமைப்பின் தலைவர் பால்தக்கரே மீது வழக்குத் தொடர மகாராஷ்டிர மாநில தேசிய வாதக் காங்கிரஸ் அரசு அனுமதி அளித்ததை அடுத்தே அவர்கள் வன்முறையில் இறங்கினார்கள்.

அவர்களின் வன்முறைத் தாக்குதல்களுக்கு டில்லியில் உள்ள தேசிய வாதக் காங்கிரஸ் கட்சியின் தலைமை அலுவலகமும் இலக்காகி உள்ளது. இந்த அலுவலகத்துக்குள் கடந்த ஞாயிறு இரவு நுழைந்த சிவசேனையினர் அங்கிருந்தவர்களைக் கடுமையாகத் தாக்கியதுடன், சேதங்களையும் ஏற்படுத்தியுள்ளனர்.

தலைவர் மீதுள்ள பற்றினால், கொதிப்படைந்த தொண்டர்கள் தாக்குதல் நடத்துவதில் ஆச்சரியம் இல்லை என்று டில்லி மாநில சிவசேனைத் தலைவர் கூறியுள்ளார். இவரின் இந்தப் பேச்சு தொண்டர்களை மேலும் வன்முறையில் இறங்கத் தூண்டும் என்று அஞ்சப்படுகிறது.

(இ-ஒ)

### ஜி. 8 மாநாடு

ஜப்பானில் 'ஜி-8' நாடுகளின் தலைவர்கள் மாநாடு இன்று தொடங்குகின்றது.

இதில் அமெரிக்க அதிபர் பில்கிளின்ரன் உட்பட பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ரஷ்யா, கனடா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

நாகா நகரில் நடைபெறும் இந்த மாநாடு எதிர்வரும் 23 ஆம் திகதிவரை தொடரும்.

# இறந்தவர்களின் அஸ்தியை சந்திரனில் தூவும் திட்டம்!

### அமெரிக்க நிறுவனம் ஏற்பாடு

வாஷிங்ரன், ஜூலை 21

இறந்தவர்களின் அஸ்தியை சந்திரனில் தூவும் வித்தியாசமான பணியை அமெரிக்க நிறுவனம் ஒன்று மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. இதற்காக சுமார் ஐந்தரை லட்சம் ரூபா அறவிடப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் செயற்பட்டு வரும் 'செலன்டிஸ்' என்ற நிறுவனமே இந்தத் திட்டத்தைத் தீட்டியுள்ளது. மறைந்த விண்வெளி ஆராய்ச்சியாளர் ஜீன்ஷுமேக்கரின் அஸ்தி கடந்த ஆண்டு விண்வெளியில் தூவப்பட்டது.

மற்றொரு ஆராய்ச்சியாளரான மாரெட்டா லெஸ்டினின் அஸ்தி அவர் இறந்து 2 ஆண்டுகளின் பின் இப்போது விண்வெளியில் தூவப்பட உள்ளது.

நாசா ஆய்வுமையம் செயற்கைக் கோள்களை அனுப்பும் சமயத்தில் ஆராய்ச்சியாளர்களின் அஸ்திகளை விண்வெளியில் தூவும் பணியைச் செயற்படுத்தியது.

இதனைத் தொடர்ந்தே அமெரிக்க நிறுவனம் சந்திரனில் அஸ்தியைத் தூவும் திட்டத்தை முன்னெடுத்துள்ளது

(ஐ-ஒ)

## உலகில் பெரும் பணக்காரரான

# புருணை மன்னரின் தம்பி சிறை செல்லும் நிலை!

### அரசுப் பணத்தை விரயம் செய்தாராம்

உலகின் பெரும் பணக்காரரான புருணை மன்னரின் தம்பியும், முடிக்குரிய இளவரசருமான ஷெவ்ரி அரசுப் பணத்தைவீண்விரயம் செய்த குற்றத்திற்காக சிறை செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

இளைய சகோதரரான ஷெவ்ரியை நம்பி புருணை மன்னர் அரச திறைசேரியின் பொறுப்பை ஒப்படைத்திருந்தார்.

ஆனால் சொகுசு வாழ்க்கைப் பிரியரான ஷெவ்ரி அரசுப் பணத்தில் இருந்து 2.75 மில்லியன் டொலர் வரை மன்னருக்குத் தெரியாமல் எடுத்துச் செலவழித்துள்ளார்.

ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் பல மாளிகைகளை வாங்கியுள்ள ஷெவ்ரி விமானம் மற்றும் உல்லாசப் படகு போன்றவற்றையும் வைத்துள்ளார். இவரிடம் 100க்கும் மேற்பட்ட கார்களும் உள்ளன.

இவரின் செலவுக்காக மாதம் ஒன்றுக்கு 3 லட்சம் டொலரை அரசு வழங்கி வருகிறது.

ஆனால் இது போதாது என்று தன்னை நம்பிப் பொறுப்பை ஒப்படைத்த மன்னருக்கும் தெரியாமல் அரசுப் பணத்தை எடுத்து ஷெவ்ரி தான்தோன்றித்தனமாகச் செலவு செய்துள்ளார்.

இது குறித்து விசாரணை நடத்திய நீதிமன்றம், ஷெவ்ரியை குற்றவாளியாகத் தீர்ப்பளித்துள்ளது. இதனைத் தொடர்ந்து அவர் சிறையில் அடைக்கப்படலாம் என்று கூறப்படுகிறது. ஆனால் மன்னர் மனது வைத்தால் ஷெவ்ரி மன்னிக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

(ஒ)

### வருமானவரி அதிகாரிகள் சோதனை

புதுடில்லி, ஜூலை 21

கிரிக்கெட் வீரர்கள் மற்றும் சூதாட்டக்காரர்களின் வீடுகளிலும், அலுவலகங்களிலும் நேற்று ஒரே சமயத்தில் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனைகளை நடத்தினார்கள்.

அசாருதீன், கபில்தேவ், அஜய்ஜடேஜா, சித்து, நிகில் சோப்ரா, அஜய்சர்மாமற்றும் 6 கிரிக்கெட் சூதாட்டக்காரர்களுக்குச் சொந்தமான இடங்களில் இந்தச் சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

(ஐ-ஒ)

### கடற்படைக்குப் புதிய நீர்மூழ்கி

புதுடில்லி, ஜூலை 21

புதிய இலகுரக நீர்மூழ்கிக் கப்பலான 'சிந்து சகத்ரா' இந்தியக் கடற்படையில் சேர்க்கப்பட்டது.

இதற்கானவைபவம் ரஷ்யாவில் செயின்ற் பீற்றர்ஸ்பெர்க்கில் உள்ள கடற்படைத்தளமொன்றில் நடைபெற்றது.

220 மீற்றர் தூரம் வரை பாய்ந்து தாக்கக்கூடிய ஏவுகணைகள் உட்பட அதிநவீன ஆயுதங்கள் இந்த நீர்மூழ்கிக் கப்பலில் பொருத்தப்பட்டுள்ளன.

(ஐ-3)

# பேச்சு நிறுத்தாத மோதலை மலேரியாக் காய்ச்சல் நிறுத்தியது

ரங்கூன், ஜூலை 21

மியான்மரில் சமாதானப் பேச்சுக்களால் கூட தடுக்க முடியாத தீவிரவாதிகளிடையேயான மோதலை கடும் மழையும், வேகமாகப் பரவிய மலேரியாக் காய்ச்சலும் நிறுத்தி வைத்து விட்டன.

அந்நாட்டில் அதிக பலம் வாய்ந்த தீவிரவாத இயக்கமான ஐக்கிய வா மாநில இராணுவம், தாய்லாந்து எல்லைப்பகுதி அருகே உள்ள பிரதேசங்களை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஷான்மாநிலப்படை என்ற அமைப்புடன் கடந்த இரு மாத காலமாக மோதல்களை நடத்தி வந்தது.

இந்த மோதல்களைத் தடுக்க பல முயற்சிகள் எடுக்கப்பட்டும் அவை பயனளிக்கவில்லை.

ஆனால் தற்போது மோதல் நடக்கும் பகுதிகளில் கடும்மழை பெய்வதாலும், அதனால் மலேரியாக் காய்ச்சல் பரவி வருவதாலும் தீவிரவாதிகள் தமது சண்டையை நிறுத்திவிட்டனர்.

இதுவரை இருதரப்பிலும் சுமார் 500 தீவிரவாதிகள் வரை மலேரியாக் காய்ச்சலால் இறந்து போயுள்ளனர்.

மியான்மரில் நடைபெறும் இராணுவ ஆட்சியை அகற்றி ஜனநாயக ஆட்சியை கொண்டுவரும் போராட்டங்கள் நடந்து வருகின்றன. அதேசமயம் தீவிரவாத இயக்கங்கள் எல்லைப்புற மாநிலங்களைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு தம்மிடையே மோதி வருவது குறிப்பிடத்தக்கது.

(ஐ-ஒ)

# நெஞ்சுடன் அணைத்திருந்த எனது மகனை இரைச்சலுடன் வந்த அலை அள்ளிச் சென்றது

## மீனவர்களால் கடலில் தூக்கிப் போடப்பட்டு உயிர்தப்பிய பெண் தெரிவிப்பு

மன்னார், ஜூலை 21

நெஞ்சுடன் அணைத்திருந்த எனது ஏழு வயது மகனை பெரும் இரைச்சலுடன் வந்த அலை அள்ளிச் சென்றது.

இப்படி மனமுருகக் கூறினார் மீனவர்களால் கடலில் தூக்கி வீசப்பட்டு உயிர் மீண்ட பெண்ணான ஜோன்சன் மேரி வனித்தா (வயது 26).

கடந்த திங்கட்கிழமை தமிழகம் நோக்கிச் சென்று பின்னர் இந்திய மீனவர்களால் கடலில் தூக்கி வீசப்பட்ட 12பேரில் உயிர் தப்பிய நால்வரில் ஒருவரான இந்தப் பெண் தமக்கு ஏற்பட்ட அவலம் குறித்து விளக்குகையிலேயே இப்படிக் கூறினார்.

மன்னார் நீதிவானின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அந்தப் பெண் மேலும் தெரிவித்ததாவது:

1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து வன்னி சென்று நாச்சிக்குடாவில் வசித்து வந்தேன். குடாநாட்டில் இருந்து வெளியேறும்போது எனது கணவன் படையினரின் சூட்டுக்கு இலக்காகி மரணமாகி விட்டார்.

எனவே எனது மகனுடனும் அம்மாவுடனும் நாச்சிக்குடாவில் வசித்துவந்தேன்.

எனது கணவனின் மூத்த சகோதரன் தமிழ்நாட்டில் கன்னியாகுமரியில் வசித்து வருகின்றார். எனக்கு அவரை இரண்டாந்தாரமாக விவாகம் செய்ய நிச்சயம் செய்யப்பட்டது. அதற்காக என்னை கன்னியாகுமரிக்கு வருமாறு அவர் அழைத்திருந்தார்.

இதற்காக எனது மகனுடன் இந்தியாவுக்குப் புறப்பட்டேன். வன்னியில் இருந்து வவுனியா சென்று அங்கிருந்து மன்னாருக்குப் போனேன்.

வவுனியாவுக்குச் சென்ற சமயம் எனது மைத்துனரான லக்சன் என்பவரைச் சந்தித்தேன். அவரும் இந்தியாவுக்குச் செல்ல விருப்பம் தெரிவித்தார். அவரையும் கூட்டிக் கொண்டுபோய் பேசாலையில் தங்கியிருந்தேன்.

கடந்த திங்கட்கிழமை இந்தியா செல்ல படகு தயாராக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. எனவே எனது மகனுடனும் மைத்துனருடனும அங்கு சென்றேன். அங்கு 25க்கும் மேற்பட்டவர்கள் இருந்தனர்.

அவர்களுக்கும் படகோட்டிகளுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் இடம்பெற்றது. எம்முடன் அவர்கள் எந்தவித பிரச்சினைக்கும் அவர்கள் வரவில்லை.

எனக்கும், எனது மகனுக்கும், மைத்துனருக்குமாக 12 ஆயிரம் ரூபாவைக் கொடுத்தேன் பின்னர் 12 பேர் ஒரு பிளாஸ்டிக் படகில் ஏற்றப்பட்டோம்

இரவு 7.30 மணிக்குப் படகு புறப்பட்டது. இரண்டரை மணிநேரம் படகுஓடிய பின் இந்திய மீனவரின் படகு ஒன்றை நாம் சென்ற படகு அண்மித்தது எம்மை அந்தப் படகில் ஏற்ற எமதுபடகோட்டிகள் முயன்றனர் ஆனால் அவர்கள் மறுப்புத் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து சொற்பநேரம் சென்றதும் மற்றுமொரு இந்திய மீனவரின் படகு காணப்பட்டது அதில் எவரும் இருக்கவில்லை 12 பேரையும் அந்தப் படகில் ஏற்றிவிட்டு எமது படகோட்டிகள் மன்னாருக்குத் திரும்பி விட்டனர்.

நாம் அந்தப்படகில் இருந்தோம் சொற்ப நேரத்தில் நான்கு மீனவர்கள் என்ஜின் அறையில் இருந்து வெளியே வந்தனர் அவர்கள்குடிபோதையில் இருந்தனர்.

யார் நீங்கள்? என்று எங்களை அவர்கள் அதட்டினார்கள். நடந்தவற்றைக் கூறி இந்தியாவுக்கு அழைத்துச் செல்லுமாறு அவர்களிடம் கேட்டு மன்றாடினோம்.

''உங்களை இந்தியாவுக்கு அழைத்துச் செல்ல முடியாது. இங்கே இறக்கிவிடப்போகிறோம்'' என்று அவர்கள் எம்மிடம் கூறினார்.

''நடுக்கடலில் இறக்க முடியாது. எங்களைக் 'காப்பாற்றுங்கள்'' என்று அவர்களைக் கெஞ்சினோம்.

பேசாலையில் கொண்டு போய் விடுகிறோம் என்று தெரிவித்துஎம்மைப்பேசாலை நோக்கி அழைத்து வந்தனர்.

வரும் வழியில் ஓரிடத்தில் படகு தரைதட்டியது. அச்சமயம் ''பேசாலை வந்து விட்டது. எல்லோரும் இறங்குங்கோ'' என அவர்கள் கத்தினர்.

நாம் பின்னடிக்கவே எங்களை ஒவ்வொருதராகத் தூக்கிக் கடலில் போட்டனர் நான் எனது 7 வயது மகனை நெஞ்சுடன் அணைத்தபடி கடலின் வீழ்ந்தேன்.

மூன்று தடவைகள் தண்ணீருக்கு கீழ் சென்று மேல் வந்தோம். அப்போது மகனைக் கைவிடவில்லை அச்சமயம் பேரிரைச்சலுடன்வந்த அலையால் என் மகன் அள்ளிச் செல்லப்பட்டான். அவரைக் கைநழுவவிட்டேன். நான் மயக்கம் அடைந்து விட்டேன். அதன் பின்னர் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது.

மறுநாள் அதிகாலை 2 மணிக்கு கரைசல் பகுதிக் கடற் கரையில் இருப்பதை உணர்ந்தேன்—என்றார்.

(இ-3)

## கலந்துரையாடல்

முள்ளி, அரியாலைப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த போது தங்களது உடைமைகளை எடுக்கத் தவறியவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை காலை பத்து மணிக்கு கோண்டாவில் இராமகிருஷ்ண இந்து வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கின்றது.

இந்தப்பகுதிகளைச் சேர்ந்த சகலரையும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

## கோரிக்கை

மீசாலை கிழக்கு மாவடிப் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த ராசகன்னி மாணிக்கம் என்பவரைத் தமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கேட்டுள்ளது. (க)


யாழ். மாவட்ட

### வேலையற்ற பட்டதாரிகள் சங்க புதிய நிர்வாக சபைத் தெரிவு 16-07-2000

தலைவர் - திரு. வே. மணிமாறன்
செயலாளர் - திரு. வே. ஜீவரூபன
பொருளாளர்- திரு. S. றங்காதரன்

ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதுவரை பதிவுசெய்து கொள்ளாத பட்டதாரிகள் எதிர்வரும் 22 ஆம் 23 ஆம் திகதிகளில் காலை 9.00— 3.00 மணிவரை இல. 84, பழம்றோட், கந்தர்மடத்தில் அமைந்துள்ள எமது அலுவலகத்தில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும். மேலும் பதிவு செய்த பட்டதாரிகள் தங்கள் பதிவுகளை உறுதிப்படுத்தவும்.

குறிப்பு— நிர்வாக சபை உறுப்பினர்களும் பிரதிநிதிகளும் 25-07-2000 அன்று காலை 8.30 மணிக்கு எமது அலுவலகத்தில் முக்கிய கலந்துரையாடலுக்காக தவறாது சமூகம் தரவும்.

(76604) — செயலாளர்.


# இனப்பிரச்சினையை தீர்த்து வைக்க அமெரிக்காவின் தீவிர பங்கு தேவை

## நேரம் வந்துவிட்டது என்கிறார் காங்கிரஸ் குழுத் தலைவர்

சர்வதேச உறவுகள் தொடர்பான அமெரிக்க காங்கிரஸ் குழுவின் தலைவர் பெஞ்சமின் ஹில்மன் அமெரிக்க அரசுத் தலைமைக்கு இலங்கை தொடர்பாகச் சமர்ப்பித்துள்ள கடிதம் இது. அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திருமதி மடெலின் அல்பிரைட்டுக்கு இந்தக் கடிதத்தை அவர் சமர்ப்பித்துள்ளார்.

இலங்கையில் நடக்கும் யுத்தம் தொடர்பாகவும் மோசமடைந்து வரும் மனிதாபிமான நெருக்கடிகள் தொடர்பாகவும் எனது அக்கறையைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க அமெரிக்கா தீவிர பங்காற்ற வேண்டிய தருணம் தற்சமயம் வந்துள்ளது.

விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றக் கூடிய நிலையில் உள்ளனர். அரசும் விடுதலைப் புலிகளும் இணக்கம் தெரிவித்தால் யாழ்ப்பாணத்தில் சிக்கியுள்ள படையினரை அகற்ற இந்தியா ஒப்புதல் அளித்துள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து துருப்புக்களை வெளியேற்றும் நடவடிக்கை இடம்பெற்றால் இராணுவ ஆயுத தளபாடங்களைக் கைவிடவேண்டிய சூழ் நிலை துருப்புக்களுக்கு ஏற்படும். இந்த நடவடிக்கை விடுதலைப் புலிகளுக்கு அரசியல் ரீதியிலும், இராணுவ ரீதியிலும் மிகப்பெரிய வெற்றியாக அமையப் போகின்றது.

யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகள் கைப்பற்றும் நிலை தென்படுவதால், நோர்வேயின் பேச்சு முயற்சிகளில் மீண்டும் முன்னெடுத்துச் செல்லும் தன்மை காணப்படுகின்றது.

டில்லியும்கொழும்பும் இலங்கையில் தனித் தமிழ் நாடு ஒன்றைப் பெறுவதற்கு ஆதரவு வழங்கப்போவதில்லை என வெளிப்படையாக அறிவித்துள்ளன. எனினும் இந்த விடயத்தில் புலிகள் உட்பட ஏனைய கட்சிகள் இதனை ஏற்றுக்கொள்ளுமா என்பது தெளிவாக இல்லை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு பேச்சை ஆரம்பிப்பது தொடர்பாக நோர்வே அக்கறையுடன் அனைத்துக் கட்சிகளுடனும் தொடர்பு கொண்டுள்ளது. அத்துடன் நோர்வே ராஜதந்திரிகள் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் மாறி மாறி விஜயம் செய்து இந்த விவகாரத்தையிட்டுப் பேச்சுக்கள் நடத்தி வருகின்றனர்.

இனப்பிரச்சினை தீர்வுக்கான சமாதான முயற்சிகளில் பிரிவினை உட்பட சகல விடயங்கள் குறித்தும் அமெரிக்கா தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தவேண்டும்.

அத்துடன் சகலதரப்புக்களும் தமது முன் நிபந்தனைகளைக் கைவிட்டால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் பங்குபற்ற முடியும்.

தமிழ் மக்களின் மனித உரிமைகளை நசுக்கும் விடயத்தில் இலங்கை அரசு நீண்ட வரலாறு ஒன்றைக் கொண்டுள்ளது. இதைவிட இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு உணவுப் பொருள்களையும், மருந்து வகைகளையும் மற்றும் அத்தியாவசியப் பொருள்களையும் அனுப்பாது தடை செய்துள்ளமை அங்கு மிகப்பெரிய மனிதாபிமானப் பிரச்சினையாகக் காணப்படுகிறது.

அத்துடன் யுத்தமுனையில் நடக்கும் சம்பவங்கள் தொடர்பான செய்திகள் வெளிவருவதைத் தடை செய்ததன் மூலம், உண்மை நிலை வெளியுலகுக்குத் தெரிவதையும் அதன் மூலம் ஏற்படும் எதிர்விளைவுகள் தனது கௌரவத்தை பாதிப்பதையும் இலங்கை அரசு தவிர்த்து வருகிறது.

இந்தக் காரணங்களினால் செய்தித் தணிக்கை குறித்து எமது அதிருப்தியைத் தெரிவிக்கவேண்டும்.

அத்துடன் இலங்கைக்கு ஆயுதங்கள் அனுப்பப்படுவதையும் இலங்கைப் படைகளுக்கு பயிற்சி அளிப்பதையும் அமெரிக்கா முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்.

மேலும் யாழ்ப்பாணத்துக்கு மனிதாபிமான உதவிகள் போய்ச்சேர இலங்கை அரசு அனுமதி அளிக்கவேண்டும் என்று அமெரிக்கா இலங்கை அரசைக் கண்டிப்பாக வலியுறுத்தவேண்டும்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3)


## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் கல்வி வலய திட்டமிடல் உதவியாளர்

### க. தர்மேசன்

அவர்களின் மறைவையொட்டி ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தினருக்குத் தெரிவித்து, கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

உதவிக் கல்விப்பணிப்பாளரும், அதிபர், நலன்புரிச்சங்கமும்.

உடுவில் கல்விக் கோட்டம், சுன்னாகம்.

(76603)



## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை கனகரட்ணம் (கிளனக்ஸ்)

(உதவித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்)

பிறவுண் வீதி, நீராவியடியைப் பிறப்பிடமாகவும் ''செல்வகிரி'' ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கனகரட்ணம் அவர்கள் 18 - 07 - 2000 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

இவர் அரியமலரின் அன்புக் கணவரும் அருந்ததியின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர் கனகவேலுப்பிள்ளை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், இராசையா, செல்லையா திருமதி சரஸ்வதி, இராஜரட்ணம், பாலசிங்கம், அருளானந்தம் ஆகியோரின் சகோதரரும் சிவமலர், புனிதமலர், குமரநாதன் (பிரான்ஸ்), கௌரிமலர் (கனடா), உமா (கனடா), கோகிலராஜி (கனடா), சூரியகுமாரி (பிரான்ஸ்), மகேஸ்வரநாதன் (கனடா), மோகன் ஆகியோரின் மைத்துனரும் மூன்னாள் வடக்குக்கிழக்கு மாகாண கல்வி, விளையாட்டு, பண்பாட்டுத்துறைச் செயலாளர் சுந்தரம் டிவகலாலாவின் பாசமிகு சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23 - 7 - 2000 ஞாயிற்றுக்கிழமையன்று அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 10 மணியளவில் தகனக் கிரியைக்காக காக்கைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி க. அரியமலர் (மனைவி)
செல்வி க. அருந்ததி (மகள்)

'செல்வகிரி',
ஆனைக்கோட்டை.

(76606)

உதயன்

## மக்களின் பாதுகாப்பு

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கப்படைகளுக்கும் இடையில் நடைபெறும் போரில் சிக்குப்படும் குடிமக்களை - பொதுமக்களை - தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்கு திருப்திகரமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.

இலங்கைக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்டிருந்த ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் இந்தக் குற்றச்சாட்டினை முன்வைத்துள்ளனர். இங்கு வந்து சென்ற பின்னர் அவர்கள் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குற்றம் சாட்டப்பட்டள்ளது. அவர்களது அறிக்கை ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படவும் உள்ளது.

மோதல் நடக்கும் இடங்களிலும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் இருந்து இடம்பெயரும் மக்களின் நிலை மிகப் பரிதாபகரமானது. அவர்கள் படும் துயரம், சியாராலியோன், செச்சினியா போன்ற நாடுகளில் பொதுமக்கள் படும் துயரத்தை ஒத்தது - என்றும் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் தான் விதித்துள்ள கடும் செய்தித் தணிக்கையைப் பயன்படுத்தி போர் நடைபெறும் பிரதேசத்தில் வாழும் மக்களின் பாதுகாப்பற்ற தன்மையையும் அவர்கள் படும் துயரங்களையும் வெளியுலகத்துக்கு தெரியாமல் தடுக்கிறது. என்பது ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள மற்றொரு குற்றச்சாட்டாகும்.

போர் இப்போது தீவிரமாக நடைபெறுவதும், மக்கள் அடிக்கடி இடம்பெயர்வதும், இடையில் சிக்குண்டு உயிராபத்தை எதிர்நோக்குவதும், எப்போது என்ன நடக்குமோ என்ற மனப்பதற்றத்துடன் மக்கள் ஒவ்வொரு விநாடியையும் ஏக்கத்துடன் கழித்துவருவதும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே ஆகும்.

யாழ்ப்பாணத்திற்கு வராமலேயே இங்குள்ள நிலையை கணிசமான அளவு அறிந்துள்ளமை - உண்மையான தகவல்களைத் திரட்டிச் சென்றமை - சம்பந்தப்பட்ட எம்.பிக்களான றிச்சார்ட் ஹேவிற், றொபேர்ட் கிவன்ஸ் ஆகியோரின் திறமையைப் பிரதிபலித்திருக்கிறது.

அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருப்பின் செய்தித் தணிக்கையால் வெளியே - வெளி உலகுக்கு - தெரியாமல் மூடி மறைக்கப்பட்ட இன்னும் பல உண்மைகளை அறியும் வாய்ப்புக் கிடைத்திருக்கும்.

யாழ்ப்பாணத்தில் போர் தீவிரமடைந்தால் ஆயிரக்கணக்கான மக்கள் அதில் சிக்குப்பட - இடையே அகப்பட - நேரிடும் என்பது ஏற்கனவே தெரிந்த ஒன்று. இது குறித்து அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் போன்ற அமைப்புகள் முன்னதாகவே எச்சரித்திருந்தன.

பிட்டுக் குழல்மாதிரி - தேங்காய்ப் பூவும் பிட்டும் போல - பொதுமக்கள் குடியிருப்புக்களும் இராணுவ முகாம்களும் கலந்துள்ள யாழ்ப்பாணத்தில், நவீன ஆயுதங்களுடன் போர் தீவிரமடையும் போது பொதுமக்கள் இடையில் அகப்படுவர். உயிரழிவும் உடைமைச் சேதமும் முன்னர் எப்போதும் இல்லாத வகையில் பெருகும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிகளாகத் தெரிந்தவை.

எனினும் இருதரப்புகளும் பொதுமக்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுக்காமல் போரைத் தீவிரமாக்கின. அதனால் பொதுமக்கள் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டனர். அவர்களை மீட்டு வருவதற்கு சர்வதேச மனிதநேய அமைப்புகளுக்குக் கூடச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

அரசதரப்பின் இச்செயல் குடாநாட்டு மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை உண்டாக்கியிருப்பது உண்மை. மீண்டும் மோதல்கள் தீவிரமானால் தமது பாதுகாப்பு கேள்விக் குறியாகிவிடும் என்ற அச்சம் யாழ்ப்பாண மக்களை நீக்கமற நின்று நிலைகுலைய வைத்துள்ளது.

ஆகையால் குடாநாட்டில் மோதல்கள் மீண்டும் தீவிரமடையாமல் இருப்பதற்கு போர் நிறுத்தம் ஒன்றே மாற்று வழி. பேச்சுவார்த்தைகளில் காலத்தைக் கரைப்பதோடு நிற்காது, போர் நிறுத்தம் செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். போரினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது.

# பாலகதிர்காம ஆடிவேல் ரதபவனி முருகன் அடியாருக்குப் பெரும்பேறு

## கதிர்காமக் கந்தனை மனக்கண் முன் நிறுத்துகிறது

அடியார்களது இன்னல் களைந்து, துன்பம் போக்கி, துயர் நீக்கி அருள் புரியும் கதிர்காமக் கந்தனின் பேரருட் கருணைத் திறன் பற்றிப் பேசி முடியாது. கதிர்காமத்திலே கடந்த செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவம்.

அந்தப் பெருமானின் அருள் பெறுவதற்கு அனுதினமும் பக்தர் குழாம் அங்கே கூடிவிடுகிறது. புனித ஷேத்திரமான கதிர்காமம் இலங்கையின் புனித தலங்களில் ஒன்றாகும்.

கலியுகத்திலே கண்கண்ட தெய்வமாக விளங்கும் கந்தப் பெருமான் கதிர்காமத்திலே கோயில் கொண்டெழுந்தருளி வீற்றிருந்து தம்மை வழிபடும் அடியார்களது கடுவினைகளைப் போக்கியருள்கின்றான்.

கதிர்காமத்துக்குப் பக்கத்திலே செல்லக் கதிர்காமம் என்ற ஸ்தலத்திலே செல்லப்பிள்ளையார் வீற்றிருக்கின்றார். தினை நிறைந்த கிராமமாகிய கதிர்காமம் முருகப் பெருமான் வள்ளியை வேட்டருளிய வரலாற்றினை ஞாபகமூட்டி நிற்கின்றது.

ஆடி மாதத்தில் வரும் கதிர்காம உற்சவத்தைக் காண்பதற்கு அடியார்கள் தேடி ஓடி நாடிச் சென்று அங்கே ஒன்று கூடிவிடுவர். ஆடிவேல் ரதத்தின் அழகுப் பவனி கண்கொள்ளாக் காட்சிகளில் ஒன்று.

அநேகமான பக்தர்களை அதிசயிக்கத்தக்க முறையில் கவர்ந்து கொண்டிருக்கின்ற கதிர்காம ஷேத்திரம் வழமையான ஆலய அமைப்புக்கும் நியமங்களுக்கும் அப்பாற்பட்டது. கதிர்காமத்தில் ஆகம முறைப்படி அமைக்கப்பட்ட ஆலயமும் இல்லை; விக்கிரகமும் கோபுரமும் இல்லை. ஆலய மண்டபத்தில் முருகனுடைய திருவுருவம் வரையப்பட்ட திரைச்சீலை மாத்திரம் தொங்கவிடப்பட்டிருக்கின்றது.

அப்படியிருக்க அங்கே அணி அணியாகத் திரண்டு பக்தர்கள் பலர் கூடும் இரகசியம் என்ன? அதுதான் இங்கே அதிசயம். முருகப் பெருமான் யந்திர வடி



வில் வீற்றிருந்து திருவருளை அள்ளி அள்ளி வழங்குகின்றான் இதய சுத்தியுடன் மனமுருகி வழிபடும் அடியார்க்ள் இன்னல் தீர்த்து இடுக்கண்களையும் கருணைக் கந்தனாக எழுந்தருளியுள்ளான் கதிர்காமக்கந்தன்.

முருகன் குமரன் குகனென்று மொழிந்துருகும் அடியார் வினை போக்கும் அருள் கந்தன் கதிர்காம ஷேத்திரத்திலே சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒரே நேரத்தில் ஒற்றுமையாக அங்கே வழிபாடு செய்கின்ற காட்சியைக் காணலாம். இனமத வேறுபாடின்றி எல்லோரும் ஒருமித்து முருகனின் அற்புத நாமத்தை உச்சரித்தவாறு தம்மை மறந்த நிலையில் வழிபாடியற்றும் தெய்வீகக் காட்சியை கதிர்காமத்தைத் தவிர வேறெங்குமே காணமுடியாது.

மகா சித்திகள் நிறைந்த முத்துலிங்க சுவாமிகள் என்பவர் தபோவனத்தில் உயர்ந்தெழுந்த தப சுவாலைச் சக்தியை சண்முக சக்கர யந்திரத்திலே ஆவிகனம் செய்து, இன்று நாம் காண்கின்ற ஆலயமிருக்கும் இடத்திலே பிரதிஷ்டை செய்து முருக வழிபாட்டை ஆரம்பித்து வைத்தார். அன்று முதல் மகா மகிமை பொருந்திய மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமையப் பெற்ற கதிர்காமம் அருள்மழை பொழிய ஆரம்பித்துவிட்டது.

அலங்காரிக்கப்பட்ட யானைகள் அணி அணியாய் வர முருகப்பெருமான் யந்திரம் வைத்த பேழையைத் தாங்கிய யானை கம்பீரமாக நடந்து வரும் காட்சியைக் காணக் கண்கோடி வேண்டும். "அரோஹரா" கோஷம் வானைப் பிளக்க இந்த அருள்காட்சி வலம்வருவதை இங்கே காணலாம். பக்தர்கள் கண்ணீர் பெருக்கிப் பக்திப் பரவசத்துடன் வழிபடுவது நெஞ்சை உருகவைக்கும். இந்தக் காட்சியை நினைவு கூரும் முகமாக யாழ்ப்பாணத்தில் பாலகதிர்காம ஆலயத்தில் விழா எடுக்கப்படுகிறது. இங்கிருந்து அங்கே போக முடியாதவர்கள் பாலகதிர்காமத்தில் முருகப்பெருமானைக் கண்டு தரிசிக்கலாம். "விழிக்குத் துணை திருமென் மலர்ப்பாதங்கள்; மெய்மை குன்றா மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள்" என்றபடி கதிர்காமக் கந்தன் விழா ஆடிவேல் விழாவாக இங்கே கோலாகலமாக நடைபெறுகின்றது.

கொழும்பிலும் இந்த ஆடிவேல் விழா மிகப் பிரமாண்டமான முறையில் நடைபெறுவது வழக்கம்.

கலியுகவரதனாம் கந்தப் பெருமான் அழகிய மணித் தேரிலே வீதிகள் தோறும் அலங்காரப் பவனி வந்து அருள் நல்குவான். பக்தர்கள் புடை சூழ வீதிவலம் வரும் ஆடிவேல் ரதம் இரண்டு காளைமாடுகளால் இழுக்கப்படும். அந்த அரிய காட்சியை இன்று நாம் யாழ்ப்பாண வீதிகளிலும் காண்பது ஓர் அரிய வாய்ப்பாகும்.

**சைவப்புலவர் இ.ஸ்ரீதரன்**

நல்லூர் பாலகதிர்காம ஆடிவேல் விழா நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பமாகியது. யாழ்ப்பாண நகரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் வேல், ரதம் பவனி வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பதைக் காணலாம்.

நல்லூர், யாழ்.நகரம், திருநெல்வேலி, கொக்குவில், கல்வியங்காடு ஆகிய இடங்கள் ஊடாக வேல் ரதம் பவனி வந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்கு அருட்காட்சி அளிக்கும் பேறு கிடைத்துள்ளது.

பாலகதிர்காம ஆடிவேல் ரத பவனி முருகன் அடியார்களின் மனங்களில் கருணை வள்ளலான கதிர்காமக் கந்தனை மனக்கண் முன் நிறுத்துகிறது.

முருகனுடைய தண்டைக் காலே தஞ்சமென்று பணிந்து விட்டால் எந்த வியாதியும் நம்மை அணுகாது. 'முருகா என ஒருதரமோதடியார் முடிமீதிரு தாள் புனைவோனே' என அருணகிரி நாதர் கூறிய வண்ணம் நாமும் நமது துன்பங்கள், துயரங்கள் அகல கதிர்காமக் கந்தனை வழிபட்டு திருவருள் பெறுவோமாக. ★

# படையினர் நலன்காக்கும் அதிகார சபைக்கு நிதி

## ஜனாதிபதி வழங்கினார்

கொழும்பு,ஜூலை21

யுத்தத்தில் ஈடுபடும் படையினரின் நலன்களைப்பாதுகாக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள படையினர் நலன்காக்கும் அதிகார சபைக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எட்டுக் கோடி ரூபாவை வழங்கியுள்ளார்.

அண்மையில் அலரிமாளிகையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் வைத்து இதனை அந்தச் சபையிடம் ஜனாதிபதி கையளித்தார்.

ஜனாதிபதி நிதியத்திலிருந்தும் பாதுகாப்பு நிதியிலிருந்தும் இத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

படையினருக்கு வீட்டு வசதி அளித்தல், வீடமைக்கப் பொருத்தமான காணிகளை வழங்குதல், அதற்குக் கடன் வழங்குதல் ஆகிய பணிகளை இந்தச் சபை மேற்கொள்ளும்

(க-4)

# புதிதாக வங்கிக் கணக்குத் தொடங்க இடம்பெயர்ந்தோர் முண்டியடிப்பு!

பருத்தித்துறையில் உள்ள வங்கிகளில் கணக்கு ஆரம்பிக்க பளை மருதங்கேணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் முண்டியடித்தவண்ணம் உள்ளனர்.

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு உடனடித்தேவைக்கான நிவாரணத்தொகையான இரண்டாயிரம் ரூபா பெறுவதற்கு வங்கிக் கணக்கு இலக்கம் அவசியம். எனவே அதனைப் பதிவு செய்வதற்காக இப்பகுதியில் உள்ள வங்கிகளில் கணக்குகளை ஆரம்பிக்க அவர்கள் முண்டியடிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

1996 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தக் குடும்பங்களுக்கு மீள்குடியமர்வு நிவாரணங்களை வழங்குவதற்கென பளை, சாவகச்சேரி ஆகிய இடங்களில் உள்ள வங்கிகளில் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது சாவகச்சேரி, பளை ஆகிய இடங்களில் இயங்கிய வங்கிகள் வலிகாமம் பகுதிகளில் இயங்குவதால் பருத்தித்துறை பகுதியில் உள்ள வங்கிகளில் கணக்குகளை புதிதாக ஆரம்பிக்குமாறு இவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-117)

**உதயவாக்கு**

பெரிய விஷயங்களைப் போலவே சிறிய விஷயங்களையும் கவனிக்கக் கூடிய மனமே; உண்மையும் உரமும் பொருந்திய மனமாகும்.

*- டாக்டர் ஜான்சன்.*

**நாளை**

ஆடி 7

சனிக்கிழமை

*திதி:* ஷஷ்டி
பின் இரவு 1.37 வரை.
*நட்சத்திரம்:* உத்தரட்டாதி
முன் இரவு 10.54 வரை.
*சுபநேரம்:* 3.02 - 4.32
*ராகுகாலம்:* 9.02 - 10.32
(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### அ.புரத்தில் பிணையில் விடுவித்த

# சந்தேக நபர்களின் வழக்குகள் யாழ்.நீதிமன்றுக்கு மாற்றம்

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் படையினரால் கைது செய்யப்பட்டு அனுராதபுரம் நீதி மன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட சில சந்தேக நபர்களின் வழக்குகள் யாழ். நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளன.

மேற்படி சந்தேக நபர்களை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி யாழ். நீதமன்றத்தில் ஆஜராகுமாறும் கட்டளைகளை அனுப்புமாறும் யாழ். நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த திகதியில் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டவர்களின் விவரம் வருமாறு:-

தெய்வேந்திரம் நிர்மல வேணி (திருநெல்வேலி), பெரியான் நவரட்ணராசா (புன்னாலைக் கட்டுவன்தெற்கு, சுன்னாகம்), சுப்பிரமணியம் மேகநாதன் (மாரியம்மன் கோயிலடி, திருநெல்வேலி மேற்கு), நாகேந்திரன் கமலநேசன் (கொக்குவில் கிழக்கு, பொற்பதி பிள்ளையார் கோயிலடி), பொன்னன் உதயகுமார் (திருநெல்வேலி, கலாசாலை வீதி), கந்தசாமி கிருபானந்தன் (புங்குடுதீவு, 2ஆம் வட்டாரம்), சந்திரசேகரக்குருக்கள் நகுலேஸ்வர சர்மா (புங்குடுதீவு, 2ஆம் வட்டாரம்), கொன்சன்ரைன் ராஜ்குமார் (குருநகர், புதிய பூங்காவீதி), ரட்ணசிங்கம் லெமானியஸ் (கிளிநொச்சி, ஜெயபுரம்), பிரான்சிஸ் செபஸ்தியாம் பிள்ளை (நாச்சிக்குடா), சண்முகம் சேனுகரன் (புத்தூர், ஆவரங்கால்), அருணிச்சந்திரன் (வசாவிளான்), பிரான்சிஸ் ஜெயக்குமார் (யாழ்.ஆஸ்பத்திரி வீதி), செல்வரட்ணம் தினேஸ்குமார் (கொக்குவில், தாவடி) மகாலிங்கம் ரவீந்திரன் (கோப்பாய் மத்தி).

(ஐ-9)

## அனுமதி அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜூலை21

இம்மாதம் 31 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றுகின்ற தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் இன்று விநியோகம் செய்யப்படவுள்ளன.

கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்ட இந்த அனுமதி அட்டைகள் நேற்றைய தினம் யாழ். கல்வி வலயத்தினால் யாழ். பிரதம தபாலகத்தில் தபாலில் சேர்க்கப்பட்டதாக அதன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.


## படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு மற்றும் திரைப்பட வட்டமும் இணைந்து நடத்திவரும் வீடியோத் திரைப்படக் காட்சியில் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு புவியியல்துறை இரண்டாம் இலக்க அறையில் 'பசி' திரைப்படம் காண்பிக்கப்படும்.

## இளம ஆசிரியருக்கு பயிற்சி

திறமைவாய்ந்த அனுபவம் மிக்க அதிபர்களை உருவாக்கும் நோக்குடன் இளம்ஆசிரியர்களுக்கு, அதிபர்களுக்கான பயிற்சிகளை வழங்க அரசு முடிவுசெய்துள்ளது. இதற்கென ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் விசேட பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்றும்

தகுதி [illegible] 100 ஆசிரியர்கள் இந்தப் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுவர் என்றும் கல்வி அமைச்சுத் தெரிவித்துள்ளது. (க)




# யாழ்.புனித பத்திரிசியார் கல்லூ
## அஞ்சல் தலை வெளி
21-07-2

## ஆயரின் ஆசிச்செய்தி

புனித பத்திரிசியார் கல்லூரியின் 150 ஆவது அகவை நிறைவை நினைவுகூர தபால் - தலையை வெளியிடும் இத்தினத்தில் பல்வேறு போர்க்கால அனர்த்தங்களினால் துன்புறும் யாழ் மண்ணில் நீண்ட காலமாக தமிழ் பேசும் மக்களுக்கு தொடர்ந்து ஆற்றிவரும் கல்விப்பணியை மகிழ்ச்சியுடன் நினைவு கொள்கின்றோம். இக்கல்லூரியின் தலைசிறந்த அதிபர்களில் ஒருவராகிய லோஙஸ் அடிகளாருக்கு தபால் - தலை வெளியிட்டு பத்திரிசிய குடும்பம் கௌரவித்து மகிழ்ந்தது. இன்று கல்லூரியின் வரலாற்றில், அதிலும் தற்கால கொடூரமும் துன்பமும் வரலாற்றை நினைவுகூர, இறைவனுக்கு நன்றி கூற புனித பத்திரிசியார் குடும்பத்துடன் வாழ்த்துகள் கூறி இணைந்து கொள்கிறேன்.

**யாழ் ஆயர். அதி வண. தோமஸ் சவுந்தரநாயகம**

## அரசாங்க அதிபரின் செய்தி

யாழ்ப்பாணம் ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்தபோது கத்தோலிக்க மிஷனரிமார் யாழ்ப்பாணத்திலே கல்விச்சேவையை வளர்க்கும் பொருட்டு பல கல்வி அமைப்புக்களை ஆரம்பித்தனர். 1850 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அரம்பிக்கப்பட்டது. இன்றும் தனது புகழை இழந்துவிடாமல் நல்லதொரு கல்விச்சேவையை யாழ் கல்விச் சமூகத்திற்கு வழங்கி வருகின்றது. வடக்கு - கிழக்கு மாகாணத்திலே இயங்குகின்ற ஒரு தனியார் கத்தோலிக்க பாடசாலை இது ஆகும். தென்னிலங்கையில் இருந்துகூட அநேகமான பிள்ளைகள் இங்கு கல்வி கற்று உள்ளனர். இவர்களில் சிலர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும், அமைச்சர்களாகவும் இருந்துள்ளனர். அத்துடன் அரசாங்க உயர் அதிகாரிகளையும் உருவாக்கிய பெருமை இக்கல்லூரிக்கு உண்டு.

ஆகவே கல்வித்துறையில் பணியாற்றி வருகின்ற இக்கல்லூரி மேலும் வளர என் நல்லாசிகள்.

**க. சண்முகநாதன்.** *(அரசாங்க அதிபர்)*

## அமலமரித்தியாகிகளின் மாகாணமுதல்வரின் ஆசி

அமலமரித்தியாகிகள் சபையினர் எம் தமிழ் சமூகத்திற்கு அளித்த தனிப்பெருங்கொடையே புனித பத்திரிசியார் கல்லூரியாகும். இக்கல்லூரி இன்று முப்பொன் விழாவைக் கண்டுமகிழ்வது, "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக்கேட்ட" தாயின் மகிழ்விற்கு ஒப்பாகும். 1848 இல் தம் தாய்நாடு, சுற்றம், சூழல் துறந்து எம் மண்ணிற்கு வருகை தந்த அமலமரித்தியாகிகள், தம் வருகையின் இரண்டாவது ஆண்டிலேயே இக்கல்லூரியை நிறுவியது அவர்கள் தமிழ் சமூதாயத்தை ஒர தீர்க்க தரிசன நோக்கோடு அன்பு செய்தார்கள் என்பதனைப் புலப்படுத்துகிறது.

அன்று தொட்டு இன்றுவரை நூற்றுக்கணக்கான கல்விமான்களை இக்கல்லூரித்தாய் பிறப்பித்துள்ளாள் என்பதிலும் பார்க்க நூற்றுக்கணக்கான பண்புள்ள, ஆளுமையுடையோரை(PATRICIANS) உருவாக்கியுள்ளாள் என்பதுதான் போற்றுதற்குரியது.

இந்த ஜூபிலி ஆண்டின் நினைவாக இடம்பெறும் 'தபால் முத்திரை வெளியீடு' தமிழ் சமுதாயத்திற்கு இக்கல்லூரி ஆற்றிய தனிப்பெருஞ் சேவைக்கு ஒரு குறியீடு எனக் கூறவேண்டும். இக்கல்லூரியில் கல்வி பயின்று கொண்டிருக்கும் மாணவரும், அவர்களது சிற்பிகளாகப் பணிபுரியும் ஆசிரியப்பெருமக்களும் காலத்தின் அறிகுறிகளைக் கருத்திற் கொண்டு, தமது பங்களிப்பைப் புரிந்திட எனது வாழ்த்துக்களையும் ஆசீர்களையும் கூறி நிற்கின்றேன்.

**அருட்திரு. அ. ஜீவேந்திரா போல் அ.ம.தி**
*அமலமரித்தியாகிகள்*
*மாகாணமுதல்வர்.*

## ஆசிரியர் சங்கத் தலைவரின் செய்தி

புனித. பத்திரிசியர் கல்லூரி தனது கல்விப் பணியில் 150 ஆவது ஆண்டினை நிறைவு செய்யும் வேளையில் இலங்கை அரசு கல்லூரியின் கொழும்புக் கிளை, 21.07.2000 அன்று தபால் தலையயொன்றினை வெளியிடுவதனையிட்டு புனித. பத்திரிசிய கல்விச் சமூகம் பெருமிதமும் மகிழ்ச்சியுமடைகிறது. தபால் தலையினை வெளியிடுவதற்கு உழைத்த அனைத்து அங்கத்தவர்களுக்கும் எமது கல்லூரியின் ஆசிரியர் குழாமின் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதில் மனநிறைவு அடைகின்றனர்.

**சி. ஸ்ரனிஸ்லாஸ்**
*தலைவர், ஆசிரியர் சங்கம்*

## அதிபரின் நன்றி வார்த்தை

எமது கல்வித் தாயாகிய புனித பத்திரிசியார் கல்லூரியின் கல்விப் பணியினது 150 ஆண்டுகளின் நிறைவையொட்டி ஞாபகார்த்த அஞ்சல் முத்திரை வெளியிடப்படும் இத்தினத்தில் பலரும் இக்கல்லூரியைப் பாராட்டும் இவ்வேளையில், எனது நாவில் எழுவது நன்றிக் கீதமே.

இறைப்பற்றை ஆதாரமாகவும் கடின உழைப்பை ஆகாரமாகவும் கொண்டு, அறிவு ஆற்றல் ஆகியவற்றுடன் ஆன்மீகத்தையும் சேர்த்து வழங்கும் தனித்துவமான கல்லூரிக் கலாசாரத்தை உருவாக்கி, மெருகூட்டி மாபெரும் முதுசமாக எமக்கு அள்ளித்தந்த நம் முன்னோருக்கு நன்றி.

150 நீண்ட ஆண்டுகளில், இக்கல்லூரிக்கு வித்திட்டவர்கள், தொடர்ந்து இதனைப் பெரியதோர் விருட்சமாக வளர்த்திட அரும்பாடுபட்ட மறை ஆயர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், அலுவலக ஊழியர்கள், மற்றும் பணியாளர்கள், நற்கனிகளாய் புகழ்தேடித்தந்த மாணவர்கள், ஆதரவளித்த பழைய மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள்; இவர்களூடாக செயலாற்றிய இறைவன் இவர்கள் யாவருக்கும் நவிலப்படவேண்டிய நன்றியின் ஒரு வடிவமே இன்றைய முத்திரை வெளியீட்டு நிகழ்வு.

பத்திரிசிய முதுசத்தை தொடர்ந்தும் பேணி வளர்ப்பது இன்றைய சந்ததியினரின் நன்றிக்கடனே.

**அதிபர்**

## மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளரின் ஆசி

கல்விப்பாரம்பரியத்தின் விழியெனத் திகழும் புனித பத்திரிசியார் கல்லூரி கடந்த நூற்றைம்பது ஆண்டுகளாக மனித விழுமியம் சிறக்கத் தனது சேவையைச் செய்து வருகின்றது. கல்லூரி நடந்துவந்த பாதையில் அடிபதித்த அனேகர் இன்று மானிடம் சிறக்க வழிகாட்டிகளாகத் திகழ்கின்றார்கள். பலர் திகழ்ந்தார்கள். திகழ்ந்து கொண்டே இருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

**கலாநிதி ச.நா. தணிகாசலம்பிள்ளை.**

## வளம்பல உனைக்காக்க வாழி! வாழி!!

*ஈழத்தில் இருங்கடலேரியா யமைந்து*
*இலங்கிடும் யாழ்ப்பாண நாடத னயலில்*
*வாழுகின்ற மக்கள்தாம் வளம்பல செழிக்க*
*வந்தமைந்த கூடமதன் வாழ்வினைக் கண்டோம்!*
*சூழுலகின் பலவிடத்துஞ் செழுமைகள் தாங்கித்*
*துலங்குகின்ற மாணவரும் தீஞ்சுவை கொண்டார்*
*வாழுலகோர் பயன்பெறவே வந்தமைந்த புனிதர்*
*வரந்தருபத் திரிசியார் நாமமது கொண்டே!*


*ஆயிரத்தெண் ணூற்றைம்ப தாம்மாண்டினிலே*
*ஐம்பதுமா ணவரைக்கொண்டாரம்பமாகி*
*மாவிரும் புகழாலே மணங்கமழ்தல் அறிந்தோம்*
*மறைதனையு மியம்புகின்ற மாண்போ டிந்நாள்*
*காயமதாய் மனிதராவார் கலகம் மறக்க*
*கல்விக்கண் வழிதிறந்தே கானு தின்பம்*
*சேயரெல்லாம் ஓங்கிடவே தாயாகி நின்று*
*செய்பணியை யாமினிதே செப்பிடலுமாமோ!*

*நூற்றாண் டிருபது முடிந்த வேளை*
*நூற்றைம் பதகவை பெற்ற பள்ளி*
*நூற்கல் வியோடு மட்டு மன்றி*
*நுண்கல் விபலவுங் கான வேண்டும்*
*மேற்படிப் பாளரை ஊக்க வேண்டும்*
*மேன்மை நலங்க ளெய்த வேண்டும்*
*நாற்புற மும்புகழ் பரப்ப வேண்டும்*
*நானில மிதனையே நச்ச வேண்டும்!*

பண்டிதர் ம.ந. கடம்பேசுவரன்.
*ஆசிரியர்.*



முன்னர் வெளியீட்ட நினைவு முத்திரைகள்



## பத்திரீசியம் பதித்த பாதச்சுவடுகள்

1846 - யாழ்ப்பாணத்தில் "கத்தோலிக்க பாடசாலைச் சபை"தோற்றம்.
1849 - யாழ். கத்தோலிக்க ஆங்கில ஆண்கள் பாடசாலை ஆரம்பம்
1850 - தற்போதைய நிலப்பரப்பில் மேற்படி பாடசாலை, 50 மாணவருடனும் 2 ஆசிரியர்களுடனும் இயங்க ஆரம்பம்.
1860 - 'Jaffna Boys Seminary' எனப் பெயர் மாற்றம், அதிகரித்த அரசநிதியுதவி
1865 - துடுப்பாட்டம் அறிமுகம்
1881 - 'ST.PATRICK'S COLLEGE' எனப் பெயர் பெற்று கல்லூரியாகத் தரமுயர்வு.
1887 - மாணவர் விடுதி ஆரம்பம்
1889 - சுருக்கெழுத்து, Book-keeping ஆகிய தொழிநுட்ப பாடநெறிகள் ஆரம்பம்.
1904 - பழைய மாணவர் சங்கம் உதயம்
1907 - இந்து மாணவர் விடுதி ஆரம்பம்
1911 - விஞ்ஞான கூடம் ஆரம்பம்
1912 - ஆசிரியர்க்கான சம்பள, ஓய்வுதிய திட்டம் ஆரம்பம்.
1921 - தேசிய பாசறையில் 'கடேற்குழு' (Cadet group) பங்குபற்றியது.
1926 - கல்லூரி இல்லங்கள் ஆரம்பம் (House system)
1927 - கூடைப்பந்தாட்டம் அறிமுகம்
1929 - குத்துச் சண்டை அறிமுகம்
1930 - சிற்றாலயம் அமைக்கப்பட்டது
1935 - கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு எனத் தரம் பிரிப்பு மத்தியூஸ் கட்டடம் அரைப்பகுதி பூர்த்தி
1940 - மாட்டீனார் குருமடத்தில் சிற்றம்பலம் காடினர் விளையாட்டு அரங்கம் அமைவு
1945 - அரச இலவசக் கல்வித் திட்டத்தில் இணைவு
1950 - மத்தியூஸ் மண்டபம் பூர்த்தியும், நூற்றாண்டு விழாக் கொண்டாட்டமும்.
1954 - சுதேச குரு (Rev. Fr.S.N.Arulnesan Omi) அதிபராக நியமனம்
1960 - பாடசாலைகள் அரசினால் சுவீகரிப்பு. புனித பத்திரிசியார் கல்லூரி நிதி அறவிடா தனியார் கல்லூரியாகவே இயங்க அனுமதி.
1971 - மாணவர் தேர்ச்சி அறிக்கையில் தர நிர்ணயம் (Grading System) அறிமுகம்.
1973 - கலாசார கழகம் தோற்றம்
1980 - பத்திரீசிய குடும்ப விழா (Family Day) அறிமுகம். நிரந்தர ஆசிரியர்க்கு அரச சம்பளம்
1982 - கீழ்ப்பிரிவுக்கான புதிய கட்டடம், (Augustine Block), புதிய கூடைப்பந்தாட்டத் திடல் அமைவு.
1984 - புதிய ஆய்வுகூடம் திறப்பு
1985 - ரெனிஸ் மைதானம், புதிய விடுதி, தியோகு விளையாட்டரங்கு, Cricket score board திறப்பு
1988 - புதிய ஆசிரியர் கூடமும், மதுரம் சதுக்கமும் திறப்பு
1990 - அருட்திரு. T.M.F. லோங் அடிகளாரை நினைவு கூர்ந்து அரசு முத்திரை வெளியிடல்.
1998 - லோங் மண்டபத்துக்கு (Long Block) அடிக்கல் வைப்பு.

யாழ்.கல்விப் பாரம்பரியத்தை உலகில் நிலைநிறுத்த உ


**லைடன் புடைவை நிலையம்**
410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**லொயலிஸ்**
திருமண வைபவங்களுக்கான
வாடகைப் பொருள்கள்
195, பிரதானவீதி,
4 ஆம் குறுக்குச்சந்தி, யாழ்ப்பாணம்.

**பற்றீசியன் நிறுவனம்**
59, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

**ஹற்றன் நஷனல் வங்கி**
பஸ்நிலையம் முன்பாக
யாழ்ப்பாணம்.

**சிற்றி மெடிக்கல்ஸ்**
487, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

**மெடி எயிட்ஸ்**
நல்லூர்
யாழ்ப்பாணம்.

ருவிங்கிள்
சிற்ஸ் & பி
173, கொழும்புத்
சுண்டுக்குளி வீதி, ய

வர்த்தக
ஆஸ்பத்திரி மு
யாழ்ப்பாண

# லூரி அகவை 150 நிறைவு
## ளியீட்டு சிறப்பிதழ்
07-2000






| | |
|---|---|
| Patrick Foy Esqr | 1850 - 1858 |
| Rev.Bro.John Joseph Brown O.M.I | 1859 - 1861 |
| Rev.Bro.patrick Joseph Conway O.M.I | 1862 - 1870 |
| Rev.Bro.Michael A.Murphy O.M.I | 1870 |
| Rev.Bro.(Fr.) Patrick O'Flanagan O.M.I | 1870 - 1874 |
| T.W.Mc. Mahan Esqr | 1874 - 1875 |
| Rev.Fr.Patrick O' Flanagan O.M.I | 1875 - 1880 |
| Rev.Bro.(Fr.) J.A.R.Smythe O.M.I | 1880 - 1883 |
| Rev.Fr.Charles H Lytton O.M.I | 1883 - 1885 |
| Rev.Fr.Jules Collin O.M.I | 1885 - 1888 |
| Rev.Fr.M.Dubreuil O.M.I | 1888 - 1889 |
| Rev.Fr.Patrick Dunne O.M.I | 1889 - 1901 |
| Rev.Fr.Jules Collin O.M.I | 1901 - 1902 |
| Rev.Fr.Charles A.Beaud O.M.I | 1902 - 1905 |
| Rev.Fr.Charles S.Mathews O.M.I | 1905 - 1921 |
| Rev.Fr.John A.Guymour O.M.I | 1921 - 1924 |
| Rev.Fr.Charles S.Mathews O.M.I | 1924 - 1936 |
| Rev.Fr.Timothy M.F.Long O.M.I | 1936 - 1954 |
| Rev.Fr.S.N.Arulnesan O.M.I | 1954 - 1960 |
| Rev.Fr.P.J.Jivaretnam O.M.I | 1960 - 1966 |
| Rev.Fr.T.A.J. Mathuranayagam | 1966 - 1976 |
| Rev.Fr.John A.Francis O.M.I | 1976 - 1979 |
| Rev.Fr.G.A.Francis Joseph | 1979 - 1992 |
| Rev.Fr.A.I.Bernard | 1992. |

### S.P.C - O.B.A அளிக்கும் நல்வாழ்த்துகள்

எம்மைக்குழந்தைப் பருவத்திலிருந்து சீரும் சிறப்புமாக உருவாக்கிய யாழ். புனித பத்திரிசியார் கல்வி அன்னைக்கு வரலாற்று முக்கியத்துவம் மிக்க 150 அகவையில் பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் நன்றிப் பெருக்குடன் நல்வாழ்த்துக்களை நல்குவதில் உவப்பிலா உவகையடைகிறோம்.

இன்று நாம் நல்ல நிலையில் மகிமையோடு வாழ்வதற்கு அடித்தளமாக இருந்த எம் கல்வி அன்னையின் அளப்பரிய அர்ப்பணிப்பை, பிரதானமாக பாசமிகுந்த அரவணைப்பும், சிறந்த வழிகாட்டுதலும், தியாகமும் நினைக்குந் தோறும் நன்றிப் பெருக்குடன் எம்மை உறுத்துகின்றன. கல்வி சார் பகுதியில் மட்டுமல்ல ஆன்மீக, அரசியல், சமூக, விளையாட்டுத் துறைகளில் புகழ்பூத்த மைந்தர்கள் பலரை ஈன்றெடுத்த பெருமைக்கும் மகிமைக்கும் எம் கல்வி அன்னை உரித்துடையவள் என்பது சாலவும் பொருந்தும்.

"இறை பற்றும் கடின உழைப்பும்" (FIDE ET LABORE) என்ற விருதுவாக்கு நினைக்கும் பொழுது தெவிட்டாத தேன் போன்று எம்மைச் சிந்தித்து செயலுருவப்படுத்துகிறது. இந்த மாயா வித்தை வாக்கு எம் நாளாந்த வாழ்வில் உந்து சக்தியாகவும் வழிகாட்டியாகவும் துலங்குகிறது. கடந்தகாலங்களில் தனித்துவம் மிக்க பலமும் நம்பிக்கைக்குரி நங்கூரமாக மிளிர்ந்த கல்வி அன்னையின் அரவணைப்பில், இன்றைய அணர்த்தங்கள் மத்தியில் துணிச்சலுடன் தியாகசேவை புரியும் அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஆள் அணியினர் அனைவருக்கும் பாராட்டுதலும் நல்வாழ்த்துக்களும் தெரிவிப்பதுடன் எதிர்காலத்திலும் மங்காத புகழை நிலைநாட்டவும், பணி தொடரவும் நாம் இறைவனை இறைஞ்சுகிறோம். எம் ஒத்துழைப்பும் பங்களிப்பும் கல்வி அன்னைக்கு என்றும் தொடரும்.

கல்வி அன்னையின் 150 ஆவது அகவையின் ஞாபகமாக உலகம் முழுவதும் வாழும் பத்திரிசியார் குடும்பத்தினரும், ஏனைய நலன் விரும்பிகளும் காணிக்கையாக அளிக்கவிருக்கும் லோங் மாடிக் கட்டடம் (LONG BLOCK.) பூர்த்தி பெற ஒவ்வொருவரும் நன்றிப் பெருக்குடன், ஆர்வத்துடன் அயராது உழைத்தால் வண. பிதா லோங் அடிகள் புனித பத்திரிசியார் கல்லூரிக்கும் நம் நாட்டிற்கும் செய்த மாபெரும் சேவைக்கு நீங்காத நினைவுச் சின்னமாக காலமெல்லாம் பறைசாற்றுவதுடன் எம் எதிர்காலச் சந்ததியும் கல்வியை நிறைவாகப் பெற்று இன்புற்று பணி தொடர வழி பிறக்கும்.

அருட்தந்தை லூயிஸ் பொன்னையா, O.M.I
*முதுநிலை உப தலைவர்,*
*புனித பத்திரிசியார் கல்லூரி,*
*யாழ் பழைய மாணவர் சங்கம்,*

### உளமார வாழ்த்துகின்றேன்

யாழ்ப்பாணத்தில் புகழ்பெற்ற தனியார் கல்லூரியாகத் தனிப்பெருமையுடன் தலைநிமிர்ந்து நிற்கின்றது புனித பத்திரிசியார் கல்லூரி. ஒரு கல்லூரி வாழ்வில் 150 ஆண்டு என்பது எத்தனையோ பரம்பரையையும், எண்ணிலடங்கா கல்விமான்களையும், உலகிற்கும் சமுதாயத்திற்கும் உயிரும் ஊட்டமும் அளிக்கும் ஆசான்களையும், கல்லூரிக்கு பெரு மதிப்பையும் பெருமையையும் தேடித்தரும் காலமாகும். அமலமரித்தியாகிகளின் அயரா உழைப்பும் ஆன்மீகவாஞ்சையும், "நாம் பெற்ற செல்வம் இவ்வையகம் பெறுக" என்ற பரந்தமனப்பான்மையும் இக்கல்லூரி உதயமாகக் காரணமாயிற்று. இன்று இக்கல்லூரி எங்கள் மறைமாவட்டத்திற்கு அருட்பணியினர் பலரை உருவாக்கும் தளமாகவும் திகழ்கின்றது.

இந்த மங்களகரமான காலத்தில் இதுவரை காலமும் இக்கல்லூரியில் பணியாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்குப் பாராட்டு கூறுவதுடன் கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆதியும் அந்தமுமான இறைவனுக்கும் அவர் அருளுடன் ஒத்துழைத்த அனைவருக்கும் ஆசியும் கூறி இறையாசியை வேண்டுவதுடன் கல்லூரிக்கும் இதயபூர்வமான நல்லாசியை விரும்புகின்றேன்.

அருட்சகோதரி போலென்ட் மத்தியாஸ்
*அதிபர்*
*பா/ திருக்குடும்பக் கன்னியர்மடம், யாழ்ப்பாணம்.*

### ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

அன்புசால் பெருந்தகையீர்!

யாழ்ப்பாணம் புனித பத்திரிசிரியார் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவை நினைவு கூரும் முகமாக முத்திரை வெளியிடுவதையிட்டுப் பெரிதும் மனநிறைவடைகின்றேன். தமிழினத்தின் தனிப்பெருமை கல்வி வளமே. இதற்காக உழைத்த கல்விச்சாலைகள் இம் மண்ணில் பல உள. இவ்வரிசையில் யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியும் ஒன்றாகும். இங்கு 150 ஆண்டுகள் கல்வித்தொண்டாற்றிய அதிபர்கள்,ஆசிரியர்கள், துணை ஆளணியினரையும் வாழ்த்துகின்றேன். ஒரு கட்டடம் உறுதியாக நிலைப்பதற்கு அதன் அத்திவாரம் உறுதியாக இருக்க வேண்டும். மனிதன் மனிதனாக வாழ்வதற்குக் கல்வி இன்றியமையாதது. அக்கல்வியை இளமையில் ஊட்டுவது சாலச் சிறந்தது. "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" இந்நிறுவனம் பண்புசார் அறிவுள்ள மாணவர்களை இந்நாட்டுக்கு மேலும் உருவாக்கித்தர இறையாசியை வேண்டுகின்றேன். இக்கல்லூரியின் அதிபர்கள், ஆசிரியர்கள், துணைஆளணியினர், மாணவர்கள் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த**
**பரமாச்சார்ய சுவாமிகள்**
***இரண்டாவது குரு மஹா சந்நிதானம்***
***நல்லை ஆதீனம்.***

### யாழ் வலயக் கல்விப்பணிப்பாளர்

யாழ் வலயக் கல்விப் பிரதேசத்தினுள் இயங்குகின்ற சம்பத்திரிசியார் கல்லூரி 1850ஆம் ஆண்டில் கத்தோலிக்க மதத்துடன் இணைந்த ஓர் ஆங்கில ஆண்கள் கல்வி நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டு இன்று வளமான ஒரு 1ஏபி தரமுடைய தனித்துவமான கல்லூரியாக விளங்குகின்றது. இக்கல்லூரியில் இன்று கற்பிக்கும் ஆசிரியர் தொகை 50க்கும் மேற்பட்டும், கல்வி கற்கும் மாணவர் தொகை 1400 வரையிலாகவும் உள்ளது. இக்கல்லூரியில் 24 ஆவது அதிபர் கடமை புரியும் இக்காலத்தில் பாடசாலையின் 150ஆம் ஆண்டு நிறைவாக ஒரு முத்திரை வெளியிடுவது தொடர்பாக இக்கல்லூரியின் சேவையைப் பாராட்டியும், வாழ்த்தியும் இச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். நிறுவுநரின் நோக்கங்களைப் பூர்த்தி செய்ய எல்லாம் வல்ல இறைவன் இக்கல்லூரியையும், அதிபர், ஆசிரியர், மாணவர்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக.

**திருமதி. செ. மகாலிங்கம்,**
*வலயக்கல்விப்பணிப்பாளர்,*
*யாழ்ப்பாணம்.*

### துணைவேந்தரின் ஆசிச் செய்தி

யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு விழாவையொட்டி இடம்பெறும் முத்திரை வெளியீட்டு விழா சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்கக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு மிக மகிழ்ச்சியடைகிறேன்.

இலங்கையில் 150 ஆண்டுகளை நிறைவுசெய்த கல்வி நிறுவனங்கள் ஒரு சிலவே. இந்நாட்டில் குறிப்பாக றோமன் கத்தோலிக்க திருச்சபையின் கீழ் உள்ள முன்னிலைப் பாடசாலைகளில் ஒன்றாக விளங்குகின்ற சம்பத்திரிசியார் கல்லூரி கடந்த 150 வருடங்களாக இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கு - குறிப்பாக யாழ்ப்பாணச் சமூகத்தின் கல்வி உயர்ச்சிக்கு - அளப்பரிய சேவை ஆற்றி வந்துள்ளது.

பெரும் எண்ணிக்கையான கல்விமான்களை சமூகத்திற்கு அளித்தது மாத்திரமல்ல, உயர்வான கல்வி, சமய, ஞான விடயங்களையும் இச்சமூகத்திற்கு வழங்கியுள்ளது. இக்கல்லூரியின் அமைவிடம் என்னை மிகவும் கவர்ந்துள்ளது. பேராலயம், ஆயர் இல்லம், மற்றும் பல்வேறு கத்தோலிக்க நிறுவனங்களால் சூழப்பட்டதாக அமைந்திருப்பது ஒரு பெரும் சிறப்பாகும்.

இக்கல்லூரியின் செயற்பாடுகள் மேலும் வளர்ந்து செல்லவும், இதன் தற்போதைய அதிபர் அருட்திரு ஆ.இ.பேனார்ட் அடிகளாரின் வழிகாட்டலில் மேலும் தனது கல்விப் பணியை முன்னெடுத்துச் செல்லவும் வாழ்த்துகிறேன்.

**பேராசிரியர்,பொ.பாலசுந்தரம்பிள்ளை.**
*துணைவேந்தர்*
*யாழ் பல்கலைக்கழகம்*



### Let us thank God for St.Patricks

It is a great priviege to send greetings to st. patricks college on the occasion of its terjubilee celebrations.

We thank God for the past! For the lifetimes of service rendered by so many remarkable men at St. patricks, and for the mark that has been left upon thousands of students as they have passed through the halls of the college.

We thank God for the Present! We thank God for the 24th principal and his staff. Recent years have brought so much sorrow and anguish and we come to the present almost breathless. We are happy that the present authorities of St.Patricks are keeping the torch of erudition burning inspite of the unsettled state of affairs around the campus.

We thank God for the future. The future beckons St.patricks into new and more significant service.

We pray that J.C. and S.P.C. in partnership with each other may be blessed with the same vision and steady courage.

THE RT.REV.DR.S.JEBANESAN
*BISHOP, C.S.I*

### விடிவெள்ளியாய்.....

அது என்ன வான்பரப்பில்....
கருக்கலிற்கு முன்னறிவிப்போ?
ஓ இதுதான் அயர்லாந்தவரிற்கு
வழிகாட்டி இங்கு அழைத்து வந்ததோ
1850 பங்குனி 17 இன் விடியலிற்கு விடிவெள்ளியாய்
மின்னியதும் இதுதானோ?
என்ன இதன் செயற்பாடுகள்
மாணவத்தை பரணிக்காது
வழி வழி காத்து
பேணியது பெருமை
இருளான நேரமொன்றில் கவனிக்கிறேன்
அட இருளைக் கிழித்து ஒளிக்கிற்றாய்
மின்னுகிறதே - பத்திரிசியம் போல்
காலையில் சூரியனின் பிரகாசத்தில்
மங்கிவிடுகிறது போல் தெரிகிறதே!
கிண்டலாய் ஒரு வினா அருகில் இருந்து
எத்தனை ஒளியாண்டுகள் தூரம்
அத்தனைக்கும் இப்படியோர் பிரகாசம்
விஞ்ஞானம் தேடலுக்காய் அலைகிறது
இது புரியாமல்.... எப்படிச் சொல்வது.....
தெளிவுற்றேன் யதார்த்தமாகப்
புரிய வைக்க திருப்பிக்கேட்டேன்
வான் வெளியின் தூசுக்கள்தான் என் செய்யும்
படிந்தாலும் பிரகாசம் அது வெல்லும்
பத்திரிசியம் என் மனதில் விரிகிறது -- அதன்
திடமான சுவடுகள் தெரிகிறது
ஒன்றரை நூற்றாண்டு நிறைகிறது
அமர்க்களமில்லாமல் ஜொலிக்கிறது
சிலவேளை கருமேகம் அதை மேவும் - எனினும்
ஒளிச்சொட்டாய் வெளிப்பட்டு அதை வெல்லும்
தெளிந்த வானம் போல் என் மனது - அதில்
பதித்த இரத்தினமாய் அதன் சுவடு
முத்திரை பதிக்கும் இந்நாளில்
முத்தமிழும் நித்திலமும் அதை வாழ்த்தும்!

ஞா.ஞ.தேவராஜன்
*மாணவ முதல்வன் 1999 - 2000*

## த உவந்து உழைத்த இக்கல்லூரியை வாழ்த்துகிறோம்


கின்ஸ்ரார்
ட் பினான்ஸ்
ாழும்புத்துறை,
வீதி, யாழ்ப்பாணம்.

லாவண்யா பல் மூக்கு
கண்ணாடி அகம்
552, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பொபி ஸ்ருடியோ
83, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

வேளாங்கன்னி ஸ்ரோர்ஸ்
783, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.

ந்தக வங்கி
திரி முன்பாக
ப்பாணம்.

சிறிலங்கா
ரெலிகொம் லிமிட்.
ஊழியர் நலன் புரிச்சங்கம
யாழ்ப்பாணம்.

இளவரசி ரெக்ஸ்ரைல்ஸ்
57, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

நியூசிற்றி ரேடேஸ்
135, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# முல்லைக் காட்டைத் தீயிட்டு அழிப்பதன் மூலம் விடுதலைப் புலிகளை அழித்துவிட முடியுமா?

**இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமாயின் - யுத்தத்திற்கு முடிவு காண வேண்டுமாயின் - முல்லைத்தீவுக் காடுகளை நேபாம் குண்டுகள் மற்றும் வெள்ளை பொஸ்பரஸ் ஆகியவற்றை வீசி அழிக்கவேண்டும் என அரசின் ஆலோசகரான தயான் ஜயதிலகா கூறியுள்ளார். இந்த தயான் ஜயதிலகா வேறு யாருமல்லர். இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இலங்கை - இந்தியா உடன்பாட்டின்படி அமைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாண அரசின் அமைச்சராகப் பதவி வகித்தவர். மாகாண சபை ஜனாதிபதி பிரேமதாஸவினால் கலைக்கப்பட்டதை அடுத்து பிரேமதாஸாவின் ஆலோசகராகப் பணியாற்றியவர். தயான் ஜயதிலகாவின் மேற்படி கூற்றுக் குறித்து 16.07.2000 திகதிய 'லக்பிம' சிங்கள வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

நோய் எதுவாயும் இருக்கட்டுமே. அதுபற்றிக் கவலையில்லை. அந்த நோய்க்கு என்னென்ன மருந்துகளைப் பயன்படுத்தலாம் என்பதைக் கூறுவதற்கு இந்த நாட்டில் எத்தனையோ திறமைசாலிகள் உள்ளனர். ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் இந்நாட்டை நிர்வகித்தவர்களில் ஒருவரான றொபேட் கினொவ் என்பவரும் எமது நாட்டினரின் இயல்பு குறித்து மேற்கண்ட கருத்தையே வெளியிட்டார். எம்மவர்கள் தங்களது குறைபாடுகள் குறித்துக் கவலைப்படாமல் ஏனையோரின் குறைபாடுகளைக் கண்டறிவதிலேயே தங்கள் திறமைகளைக் காட்டுகின்றனர். வீதியால் நீங்கள் சென்று கொண்டிருக்கும் போது உங்கள் கண்கள் சிவந்து இருந்தால் கண்களுக்குச் செய்ய வேண்டிய வைத்தியங்கள் பற்றி ஆயிரம் பேர் ஆலோசனை கூறுவார்கள். இது எமது மக்களின் இயல்பு; மாற்ற முடியாதது. ஆனால் உங்களைச் சந்தித்த எவரும் உங்களுக்கு கண் வைத்தியசாலைக்கு வழிகாட்டமாட்டார்கள்.

தற்போது நாடு போர்ச் சூழ்நிலையில் உள்ளது எனக் கூறப்படுகிறது. எனவே பல்வேறு யுத்தவிமர்சகர்கள், ஆலோசகர்கள் போதுமான அளவுக்கு உருவாகியுள்ளனர். அவர்களது ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் நாம் தினமும் செய்தி ஊடகங்கள் மூலமாகக் காணவும் கேட்கவும் முடிகிறது. ஹோ சி மின், சேகுவேரா, சார்ள்ஸ் டேட்றே ஆகியோர் எமது யுத்த ஆலோசகர்களிடம் பிச்சை எடுக்கவேண்டும். அவ்வளவுக்கு எம்மவர்கள் திறமைசாலிகள்.

சுமார் ஏழு அல்லது எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் எமது சங்கைக்குரிய மகாநாயக தேரர் ஒருவர் புதுமையான யுத்த ஆலோசனையை வழங்கியிருந்தார். வவுனியாவுக்கு வடக்கேயுள்ள நிலப்பரப்பு யாவும் வெட்ட வெளிகளாக்கப்படவேண்டும் என ஆலோசனை தெரிவித்திருந்தார் அவர். இந்த ஆலோசனையில் சிங்களக் கிராமங்களை உருவாக்கும் நோக்கமும் அடங்கியிருக்கக் கூடும்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் மோதல்கள் தொடர்பான ஆலோசகராக விளங்கிய தயான் ஜயதிலகவும் அண்மையில் இவ்வாறன கருத்தை வெளியிட்டுள்ளார். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமாயின் - யுத்தத்தில் வெற்றிபெற வேண்டுமாயின் - முல்லைத்தீவு காடுகளை தீயிட்டுக் கொளுத்தவேண்டும் என்பதே அவர் தெரிவித்துள்ள கருத்தாகும்.

அன்று மகாநாயக்க தேரர் வெளியிட்ட கருத்துக்கும் இன்று தயான் ஜயதிலக வெளியிட்டுள்ள கருத்துக்கும் மிகச் சொற்ப வித்தியாசமே உள்ளது. தயான் ஜயதிலக தனது கருத்தை அத்துடன் நிறுத்திக் கொள்ளவில்லை. முல்லைத்தீவுக் காட்டை அழிப்பதற்கு நேபாம் குண்டுகளையும் வெள்ளை பொஸ்பரஸ் குண்டுகளையும் பயன்படுத்த வேண்டும் எனவும் சிபார்சு செய்துள்ளார்.

இவை போன்ற ஆலோசனைகள், ஆட்சியாளர்களுக்கு வழங்கும் உக்கிய கயிற்றை ஒத்தனவாகும். இந்த ஆலோசனை வெளிப்படையாகத் தெரிவதை விட உள்நோக்கம் கொண்டது எனலாம்.

எமது நாட்டு நிலைமை வரலாற்று ரீதியாக இவ்வாறு சீர்குலைவதற்குக் காரணம் உக்கிய கயிற்றைப் பயன்படுத்தி வந்ததேயாகும். இந்நாட்டில் இனப்பிரச்சினை என ஒன்று இருக்குமேயானால் அது மனித சமூக மட்டத்திலேயே இருக்கவேண்டும். பதிலாக முல்லைத்தீவுக் காட்டுக்குள் இருக்கக்கூடாது.

விடுதலைப் புலிகள் இயக்கம் இன்று உலகில் உள்ள பிரபலமான, திறமை மிக்க கெரில்லா அமைப்பாகும். ஒரு கெரில்லா அமைப்பானது ஒரு சமூகத்தில் உள்ள நிகழ்வுகளின் அடிப்படையில் உருவாகிறதே தவிர, காட்டின் அடிப்படையில் உருவாவதில்லை. இதை மா சே துங்கின் வார்த்தைகளில் கூறுவதாயின், "கெரில்லா போராளியும் மக்களும் - நீரும் மீனும் போன்று - ஒன்றுடன் ஒன்று இணைந்தவையாகும்" - எனலாம்.

அயர்லாந்தில் குடியரசு இராணுவக் கெரில்லாக்களின் முகாம்கள் அந்நாட்டின் முக்கிய நகரங்களிலேயே அமைந்துள்ளன. "மோரோ" கிளர்ச்சியாளர்கள் மற்றும் இத்தாலியில் சிவப்பு ராணுவ அமைப்பு ஆகியன நகரங்களை மையமாகக் கொண்டே இயங்குகின்றன. ஒரு கெரில்லா அமைப்பிற்கு கிராமம், நகரம், காடு ஆகியவற்றுக்கிடையே விசேட வேறுபாடு இல்லை. அவர்கள் தாங்கள் இருக்கும் இடத்திற்குப் பொருத்தமான விதத்தில் தந்திரங்களை அனுசரித்து வருகின்றனர்.

சி.ஐ.ஏ., மொசாட், கே.ஜி.பி. ஆகிய அமைப்புகளுக்கு சவால் விடும் அளவுக்கு அமைந்த கெரில்லா அமைப்புகள் ஐரோப்பிய நகரங்களிலேயே செயற்படுகின்றன. யதார்த்தநிலை இவ்வாறு இருக்கையில் தீவைத்துக் காட்டை அழிப்பதன் மூலம் கெரில்லா ராணுவத்தைத் தோற்கடிக்கலாம் என ஆலோசனை வழங்குவது தலையிலுள்ள பேன்களை ஒழிக்க தலைக்குத் தீ மூட்டவேண்டும் எனக் கூறுவதற்கு ஒப்பானதாகும்.

தயான் ஜயதிலகா முல்லைத்தீவு காடுகளை அழிப்பதற்கு பயன்படுத்த வேண்டும் எனச் சிபார்சு செய்யும் நேபாம் குண்டுகள் பற்றியும் இங்கு குறிப்பிடவேண்டியுள்ளது. அமெரிக்க ஆயுதமான இந்த நேபாம் குண்டுகளுக்கு தயான் ஜயதிலகா பிரச்சாரம் செய்கிறார். 1974 காலப்பகுதியில் இந்தக் குண்டுகளை அமெரிக்கா வியட்நாம் மீது வீசியது. வியட்நாம் மக்களின் அர்ப்பணிப்புகள், ஆற்றல்கள், ஒற்றுமை, ஆகியனவற்றிற்கு முகம் கொடுக்க முடியாத அமெரிக்கா ஏகாதிபத்தியவாதிகள் 1974ஆம் ஆண்டின் மத்தியில் தோல்வியின் விளிம்பைத் தழுவினர். அப்போதுதான் அமெரிக்கர்கள் நேபாம் குண்டுகளை வீசி வியட்நாமிலுள்ள இயற்கை வளங்களை அழித்தனர்.

அவ்வாறு குண்டுகளை வீசி அழிப்பதில் பல நோக்கங்கள் உள்ளடங்கியிருந்தன. வியட்நாம் மக்களின் விவசாயப் பொருளாதாரத்தை அழித்து வியட்நாம் மக்கள் யுத்தத்தை நடத்துவதற்கு முதுகெலும்பாக அமைந்த விவசாயப் பொருளாதாரத்தை உடைத்தல், மண்ணையும் மண்ணின் வளத்தையும் அழித்தல், நிலப்பரப்பைப் பாலைவனமாக்குதல் ஆகிய நோக்கங்களை அந்த நேபாம் குண்டுவீச்சுக் கொண்டதாக இருந்தது.

இருப்பினும் வியட்நாம் புரட்சிவாதிகள் இவையாவற்றையும் எதிர்கொள்வதில் வெற்றி கண்டனர். விவசாயிகள் கிராமங்களில் தீயணைப்பு அமைப்புகளை உருவாக்கினர். நாடும், புரட்சியும் வெற்றியடைவது இரண்டு விடயங்கள் அல்ல; இவை இரண்டும் ஒன்றே என்று அம்மக்கள் செயற்பட்டனர். வியட்நாமில் நேபாம் குண்டுகள் மாத்திரம் தோல்வியைத் தழுவிக் கொள்ளவில்லை. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் தோல்வியைத் தழுவிக் கொண்டனர்.

காட்டை அழிக்கும் ஆலோசனை விடுதலைப் புலிகளின் முகாம்களை அழிக்கும் நோக்கத்தைக் கொண்டதல்ல என்பது தெளிவாகிறது. நாட்டின் தேசியச் சொத்துக்களான வனங்களை அழிப்பதில் உள்நோக்கமுள்ளது. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்நாட்டின் தரைப்பரப்பில் 74சதவீதம் காடுகளாக இருந்தன. ஆனால் 1977இல் இது 27 சதவீதமாகக் குறைந்து தற்போது 12 சதவீதமாக எங்களால் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன.

கடந்த நூற்றாண்டிலேயே அதிகமான காடுகள் அழிக்கப்பட்டன. அதன் பலாபலன்களை இன்று மக்கள் அனுபவித்து வருகின்றனர். சிறிலங்காவைப் போலவே ஏனைய நாடுகளிலும் காடுகள் அழிக்கப்பட்டதால் "ஓசோன்" படலங்களில் துவாரங்கள் ஏற்பட்டுள்ளன. எமது பிரதேசங்கள் பாலைவனங்களாக வாய்ப்புக்கள் உள்ளன. காடுகள் அழிக்கப்பட்டது எமது காலநிலைகளில் மாற்றங்கள் ஏற்படக் காரணமாகும். வன ஜீவன்களைப் பாதுகாக்க ஐ. நா.சபை கடுமையான போராட்டங்களை நடத்தி வருகிறது.

எமது அரசும் இவ்விடயத்தில் பொறுப்புடன் செயற்பட்டு வருகிறது. இவ்விடயம் தொடர்பான சர்வதேச கருத்தரங்குகள் இந்நாட்டில் நடைபெற்றுள்ளன. கடந்த நூற்றாண்டின் இறுதியில் அமெரிக்கா தனது தேசிய

**தமிழில்:- கஜனி**

வனச் சொத்தாக 25 கோடி ஏக்கர்களைக் கொண்டிருந்தது.

முழு உலகச் சமூகம் தான் பெற்றுள்ள விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்தி சூழலைப் பாதுகாப்பது என முடிவெடுத்துள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் எமது நாட்டில் எஞ்சியுள்ள 12 சதவீதமான காடுகளும் தீயிட்டு அழிக்கப்பட வேண்டும் என்ற ஆலோசனையை நாம் புத்தி பூர்வமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தயான் ஜயதிலகாவின் இந்த ஆலோசனையானது "சுல்தான் அல்லது பக்கிரி" என்ற கூற்றுக்கு ஒப்பானது. தயான் ஜயதிலக முன்னர் ஜே. ஆர்.ஜெயவர்த்தனா மற்றும் பிரேமதாஸ ஆகியோருக்குப் போட்ட தாளங்களில் இதுவும் ஒன்றாகும். இவ்வாறான கருத்துக்கள் இவர் பெருமாளுடன்(வரதராஜப்பெருமாள்) கொண்டிருந்த பரிச்சயத்தால் ஏற்பட்டதாயிருக்கும் என்பதை நாம் அரசுக்குக் கூறி வைக்க விரும்புகிறோம். ★

---

# பௌத்தத்துக்கு முதலிடம் வழங்கியதே நாட்டின் அழிவுப் பாதைக்குக் காரணம்!

## பல்கலைக்கழக விரிவுரையாளர் கூறுகிறார்

கொழும்பு,ஜூலை21

"1972ஆம் ஆண்டு அரசமைப்புத் திருத்தப்பட்ட சமயம் பௌத்தமதத்துக்கு முதலிடம் வழங்கியமைதான் நாடு பாரிய அழிவை நோக்கிச் செல்லக் காரணமாகியது. தமிழ் மக்கள் பிரிந்து செல்லப் பாதை அமைத்த முதல் நிகழ்வும் இதுவேயாகும்." - இப்படி பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி அமரசிறி சொய்லா கூறுகிறார்.

மாத்தளையில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்த வைத்தது என்பது புதுமையான விடயம் அல்ல.

சமயத்தலைவர்கள் நாட்டின் அரசியலில் பங்குபற்றத் தொடங்கினால் நாடு அழிவுப் பாதையில் தான் செல்லும். பணம், அதிகாரம், காமம் போன்றவற்றில் இருந்து சமயத் தலைவர்கள் விலகியிருக்க வேண்டும்.

72 ஆம் ஆண்டு அரசமைப்புத் திருத்தப்பட்ட சமயம் பௌத்தமதத்துக்கு முதலிடம் வழங்கப்பட்டது. அதனால்தான் நாடு பாரிய அழிவை நோக்கிச் செல்ல நேரிட்டது.

தமிழ் மக்கள் பிரிந்து செல்லப் பாதை அமைத்த முதல் நிகழ்வு அதுதான். நாட்டில் பிரச்சினைகள் உருவாக இதுவே காரணமாயிற்று.

நாடு சுதந்திரம் அடைந்து ஐம்பது ... கள் பூர்த்தியா... நிலையில் நான்கு தடவைகள் அரசமைப்பு திருத்தப்பட்டுள்ளது. உலகிலேயே இது ஒரு பெரும் சாதனையாகும்.

அமெரிக்காவில் 250 வருட வரலாற்றில் 26 தடவைகள் அரசமைப்புத் திருத்தப்பட்டது. இந்தியாவில் 76 முறைகள் அரசமைப்புத் திருத்தப்பட்டது.

அரசமைப்பு என்பது அதி உயர் நீதி. அதை எவரும் விமர்சிக்க முடியாது. ஆனால் அதன் மூலம் பதவி ஏற்ற ஜனாதிபதி அந்த அரசமைப்பை விமர்சிக்கின்றார். இது ஒன்றே அவருக்கு எதிராக குற்றவியல் பிரேரணை ஒன்று கொண்டு வருவதற்குப் போதுமானது.

உத்தேச அரசமைப்பை விடுதலைப்புலிகளும், தமிழ் கட்சிகளும், மக்கள் விடுதலை முன்னணியும், பிக்குமார் சபைகளும் எதிர்க்கின்றன.

பல இனமக்கள் வாழும் ஒரு நாட்டில் அனைத்து மக்களும் ஏற்கக் கூடியதாக அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

இந்த நாட்டில் 72 ஆம் ஆண்டு அரசமைப்புத் திருத்தப்பட்ட சமயம், சிங்கள மொழிக்கும் பௌத்தத்துக்கும் முதல் இடம் அளித்து அந்த மக்கள் திருப்திப்படுத்தப்பட்டனர். 78ஆம் ஆண்டு மீண்டும் அரசமைப்புத் திருத்தப்பட்ட சமயம் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் அதையே செய்தார். ஒழுங்கான அரசமைப்பை உருவாக்க வேண்டிய பொறுப்பு அரசியல்வாதிகள் கைகளில்தான் உள்ளது.

பண்டாரநாயக்க இனம், மதம் ஆகியவற்றை மையமாக வைத்து பதவியைக் காப்பாற்றினார். பண்டா - செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தது வெட்கப்பட வேண்டிய செயலாகும்.

இன்றுள்ளநிலையில் அனைத்து மக்களும் ஏற்கக்கூடியதாக அரசமைப்பில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும். அப்படிச் செய்யாது விட்டால் அரசமைப்பை மாற்றியும் பயன் ஏதும் கிடைக்கப் போவதில்லை - என்றார். (ஐ-3)

### மனைப்பொருளியல் பாடநெறிக்கு தெரிவானோர்

ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் மொழிப் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு, நேர்முகப் பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் இருந்து மனைப்பொருளியல் பாடநெறிக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் விவரம் முன்னர் வெளியான பட்டியலில் தவறவிடப்பட்டிருந்தது! அவர்களின் விவரம்வருமாறு:-

**மனைப்பொருளியல்**

சம்.மீரா(திருநெல்வேலிகிழக்கு), மரியதாஸ் ஆன் மொனிக்கா(திருநெல்வேலி), கணேஸ் தனுஷா(நல்லூர்), துரைரட்ணம் அகல்யா (திருநெல்வேலி), என்.செல்வகுமாரி (இணுவில்கிழக்கு), இராமநாத பிள்ளை செல்வலக்ஷ்மி (இணுவில் கிழக்கு), சண்முகலிங்கம் நாகத்ராணி(இணுவில்), சியம்புநாதன் சசித்ரா(முகவரி குறிப்பிடப்படவில்லை), பிரான்சிஸ் ஜெயமலர் (உடுவில் தெற்கு) (ஐ-3-க)

---

# கூட்டணியின் சார்பில் இளம் வேட்பாளர்கள்!

விரைவில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் யாழ். மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த யாழ். மாநகரசபையின் இளம் உறுப்பினர்கள் போட்டியிடுவர் என்று கூட்டணி வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது.

இதேவேளை -

பொதுத் தேர்தலில் புளொட் அமைப்பு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களில் தனித்தோ அல்லது ஒன்றிணைந்தோ போட்டியிடும் என அதன். தலைவர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் வன்னி, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலேயே தமது அமைப்பும் போட்டியிடும் என சித்தார்த்தன் மேலும் தெரிவித்தார்.

தமிழ்க் கட்சிகளின் அடிப்படைக் கொள்கைகளில் மாற்றம் இல்லை. அணுகுமுறைகளில்தான் வித்தியாசம் காணப்படுகிறது.

தமது கட்சி தமிழ் - பிரதிநிதித்துவத்தைப் பாதுகாப்பதற்காக அடிப்படைக் கொள்கைகளில் ஒற்றுமையுள்ள கட்சிகளுடன் ஒன்றிணைந்து தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளது' - என்றும் அவர் கூறினார்.

---

# கல்வி அமைச்சின் அனுமதியுடனேயே இனிமேல் அதிபர் நியமனங்கள்

கொழும்பு,ஜூலை21

எதிர்வரும் காலங்களில் அரசாங்கப் பாடசாலைகளில் ஏற்படும் அதிபர் வெற்றிடங்களுக்கு நிறைவேற்று அதிபர்கள் அல்லது பதில் அதிபர்களை நியமிப்பதற்கு மத்திய கல்வி அமைச்சின் அனுமதி பெறப்படல் வேண்டும் என மாகாணக் கல்வி அமைச்சு மற்றும் வலயக் கல்விப் பணிமனைகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் சிரேஷ்ட செயலாளர் யு.ஏ.பி. பண்டார இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றை, அவர் வெளியிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் அதிபர் பதவிக்கு ஏற்படும் வெற்றிடங்கள் மாகாணக்கல்வி அமைச்சின் அனுமதியுடனேயே நிரப்பப்பட்டு வந்தன.

புதிய பணிப்புரையின்படி - மத்திய கல்வி அமைச்சின் அனுமதியின்றி நியமிக்கப்படும் அதிபர்கள், அதிபர் சேவையில் உள்ளீர்க்க எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என்றும் -

மாறாக அவர்களை நியமிக்கும் அதிகாரியே சகல பொறுப்புக்களையும் ஏற்கவேண்டும் என்றும் -

அதிபர் வெற்றிடங்களுக்கு அதிபர் சேவையில் உள்ளவர்களையே நியமிக்க வேண்டும் என்றும் -

அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 20ஆம் திகதியில் இருந்து இச் சுற்றறிக்கை நடை... (க-4)

# வடமராட்சி கிழக்கில் பலியான 16 பொதுமக்களின் விவரங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 21

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடந்த மார்ச் மாதமும் அதற்குப் பின்னரும் ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்களினால் கொல்லப்பட்ட 16 பொதுமக்களின் விவரங்கள் கிடைத்துள்ளதாக உதவி அரசாங்க அதிபர் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

மார்ச் 26 ஆம் திகதி இப்பகுதியில் ஆரம்பமான மோதல்களையடுத்து தொடர்ந்து விமான மற்றும் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இத்தாக்குதல்களில் பலியானவர்களின் விவரம் வருமாறு:-

வடிவேலு பொன்ராசா, முருகன், வள்ளிப்பிள்ளை, வயிரவிப்பிள்ளை பொன்னுச்சாமி, நாகரத்தினம் விஜயராணி, தணிகாசலம், அருந்தவராசா, பேதுறுப்பிள்ளை, மரியபுஸ்பம், செபஸ்தியாம்பிள்ளை டெமிற்றிலீடா, ரி. சிவலிங்கம், அ. கதிர்காமு, பொ. இலட்சுமிப்பிள்ளை, பொ. கீர்த்தனா, சி. பரஞ்சோதி, சி. லலிதா, சி. கணபதிப்பிள்ளை, எஸ். லிம்சிதா, த. வினாசித்தம்பி.

(ஐ-5)

## பராட்டு விழாவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், ஜூலை 21

கடந்த ஆண்டில் நடைபெறற ஜி. சீ. ஈ சாதாரண தரப் பார்ட்சையில் சித்தியடைந்த யாழ்ப்பாணம் அரசடிப் பகுதியைச் சேர்ந்த மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக அரசடி ஜனசக்தி சனசமூக நிலையத்தினால் பாராட்டு விழாவும் பரிசளிப்பு வைபவமும் நடத்தப்படவுள்ளன.

இந்த நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிலையத் தலைவர் வ. தம்பித்துரை தலைமையில் நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

## சங்கக்கிளை

அரியாலை, ஜூலை 21

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பாவனையாளர்களின் வசதி கருதி வண்ணார்பண்ணையில் '5பீ' என்ற இலக்கக் கிளையை மீண்டும் திறந்து வைக்க உள்ளது.

தற்போதுள்ள '5ஏ' கிளையுடன் அதிகளவு குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதனால் ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்க்கும் நோக்கத்துடனேயே மேற்படி கிளை திறக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-17)

# கிராமிய வங்கி சமாசத்துக்கு புதிய கட்டடம் அமைக்கப்படும்

அரியாலை, ஜூலை 21

யாழ். மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசப் பணிமனை 25 லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்படவுள்ளது.

சமாசத்தின் பொதுச்சபைக் கூட்டம் அண்மையில் இடம்பெற்ற சமயம் சமாசத்திற்கு எனச் சொந்தமான கட்டட வசதி ஒன்றை அமைப்பது என்று தீர்மானிக்கப்பட்டு அதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பதாக சமாசத்தின் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார்.

சமாசப் பணிமனையை அமைக்கும் பொருட்டு காணியுடன் கூடிய கட்டடம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கும் அல்லது காணியைக் கொள்வனவு செய்து கட்டடம் ஒன்றை அமைப்பதற்கும் பொதுச்சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சமாசத்திற்கென நிரந்தர கட்டட வசதிகள் இல்லாததினால் சமாச அலுவலகம் தற்போது யாழ். கோயில் வீதியில் வாடகைக் கட்டடம் ஒன்றில் இயங்கி வருகின்றது.

(ஐ-17)

# இணக்கம் காணாத விடயங்களில் மாற்றுத் திட்டம் ஒன்றை ஈ. பி. டி.பி முன்வைத்துள்ளது

## அக்கட்சியின் பிரமுகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21

புதிய அரசமைப்பு யோசனைகளில் இணக்கம் காணப்படாத விடயங்கள் தொடர்பாக மாற்றுத் திட்டம் ஒன்றை முன்எடுத்துள்ளோம். இது தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்று வருகின்றது என்று ஈ.பி.டி.பியின் ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் ந. மதனராஜா தெரிவித்தார்.

இது விடயமாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்கள் கௌரவமான வாழ்க்கை நடத்தக் கூடியதாக தற்போது அரசினால் முன் வைக்கப்பட்ட தீர்வுத் திட்டம் அமைய வேண்டும். ஏனைய மாகாண சபைகளை விட வடக்கு — கிழக்கு மாகாணசபை விசேட அதிகாரங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். வடக்கு—கிழக்கு இணைப்பு சம்பந்தமாகவும், காணி விடயம் சம்பந்தமாகவும் இதுவரையும் இறுதி முடிவு எடுக்கப்படாதது துரதிர்ஷ்டமானது.

வடக்கு—கிழக்கு மாகாணத்தை இரண்டாகப் பிரிப்பதை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி முற்றாக நிராகரித்துள்ளது. அரசு எடுத்திருக்கும் வடக்கு—கிழக்கு மாகாணப் பிரிவுத் திட்டத்திற்குப் பதிலாகவும் காணி விடயம் தொடர்பாகவும் மாற்றுத் திட்டம் ஒன்றை நாம் எடுத்துள்ளோம். இது தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்று வருகின்றது.

தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடியதான பல விடயங்கள் எம்மால் முன் வைக்கப்பட்டதுடன் அத் திட்டம் அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. ஈ.ம.ஜ. கட்சியானது தமிழ் பேசும்மக்களின்உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் நியாயமான தீர்வுக்காகவும் குரல் கொடுத்து வரும் என்றுள்ளது.

(ஐ-3)


## யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் பிரிவு ஓய்வுபெற்றோர் சங்கம் அங்குரார்ப்பணம்

திகதி: நாளை (22-07-2000) சனிக்கிழமை
நேரம்: காலை 10.00 மணி (புதிய நேரம்)
இடம்: யா/ வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தின் ஊடாக ஓய்வூதியம் பெறும் ஓய்வுபெற்றோரை இந்நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

பா. செந்தில்நந்தனன்
பிரதேச செயலாளர்.
பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.

[சி/12265]


## ஐ. நா. தூதரகம் உதவி

சுன்னாகம், ஜூலை 21

வலி. தெற்கு பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு அகதிகளுக்கான ஐ நா. தூதரகம் கூரை விரிப்புக்களையும், சுற்றி அடைப்பதற்கான விரிப்புக்களையும் வழங்கியுள்ளது.

இடம்பெயர்ந்து தங்கியுள்ளவர்களுக்கு 100 குடிசைகள் அமைக்கும் திட்டத்தின் கீழேயே இவ்வுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் 65 குடிசைகளும், உடுவில் இலந்தையடி நலன்புரி நிலையத்தில் 25 குடிசைகளும், சங்குவேலி அந்திரான் நலன்புரி நிலையத்தில் 10 குடிசைகளும் அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவற்றில் 55 குடிசைகளுக்கான உதவிகள் ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டதாகவும், ஏனைய குடிசைகளுக்கான உதவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் வலி. தெற்கு பிரதேச செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் ரி. தேவராஜன் தெரிவித்தார்.

(ஐ-27)

## இறைச்சிக்காக மாடுகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 21

காரைநகர் பலகாடு பகுதியில் மாடுகள் இறைச்சிக்காகத் திருடப்படுவது அதிகரித்துள்ளதாக அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

சுருக்குத் தடங்களைப் போட்டு மாடுகளைப்பிடித்து, வெட்டி பொன்னாலை வழியாக அவற்றை யாழ். நகருக்குத் திருட்டுத்தனமாகக் கொண்டு சென்று விற்பனை செய்வதில் சிலர் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-111)

# ஓய்வூதியப் பணத்தை பருத்தித்துறையில் வழங்குக

## வாடிக்கையாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 21

சாவகச்சேரி தேசியசேமிப்பு வங்கியில் ஓய்வூதியம் பெற்று தற்பொழுது இடம்பெயர்ந்து வடமராட்சிப் பகுதியில் தங்கியுள்ள ஓய்வூதியர்கள் தமக்குரிய ஓய்வூதியப் பணத்தை பருத்தித்துறையில் உள்ள தேசியசேமிப்பு வங்கி ஊடாக வழங்குமாறு கேட்டுள்ளனர்.

கடந்த மே மாதத்துக்குரிய ஓய்வூதியம் பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி ஊடாக வழங்கப்பட்ட போதிலும் அடுத்த இரண்டு மாதங்களுக்குரிய ஓய்வூதியம் யாழ்ப்பாணம் மற்றும சுன்னாகம் வங்கிகளில் மட்டுமே வழங்கப்பட்டது.

இதனால் பல ஓய்வூதியர்கள் பிரயாணம் செய்வதற்கு மிகவும் கஷ்டப்பட்டதுடன் பல சிரமங்களையும் எதிர்நோக்க வேண்டி இருந்தது.

எனவே இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் குறிப்பிட்ட பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியில் ஓய்வூதியம் பெறுவதற்கு ஒழுங்குகளை மேற்கொண்டு தர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(இ-10)

## கூரை விரிப்புக்கள் வழங்க ஏற்பாடு

சுன்னாகம், ஜூலை 21

சமீப காலத்தில் இடம்பெயர்ந்து தமது இருப்பிடங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியாது உறவினர் நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளவர்களுக்கு அவர்களின் இருப்பிட வசதியை விரிவுபடுத்துவதற்கென கூரை விரிப்புக்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னோடியாக இவ்வாறுதங்கியுள்ளவர்களின் விவரங்களைத் திரட்டி அனுப்புமாறு அரச அதிபர் பிரதேச செயலர்களைக்கேட்டுள்ளார்.

சர்வதேச உதவி அமைப்புகள் குறிப்பிட்ட அளவு கூரை விரிப்புகளையே கைவசம் வைத்திருப்பதால் விரைவாக பட்டியல்களை அனுப்பி வைக்குமாறு அவர் கோரியுள்ளார்.

(ஐ-27)

## ஆவணங்கள் கிடைக்காத மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 21

திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் பட்ட மேற்கல்விடிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பித்து பதிவுக்கான ஆவணங்கள் கிடைக்கப்பெறாத மாணவர்களை உடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். பிராந்திய இயக்குநர் ஆ. ஞானேந்திரன் கேட்டுள்ளார்.

பதிவுக்கான ஆவணங்கள் கிடைக்கப்பெற்றவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுக்கான பணத்தினை வங்கியில் செலுத்தி அதன் பற்றுச்சீட்டு, இருபுகைப்படங்கள், பிறப்புச் சான்றிதழ் பிரதி, பட்டம் பெற்றதற்கான உறுதிச் சான்றிதழ் என்பவற்றுடன் பிராந்திய அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது

இதேவேளை —

பதிவுக்கான ஆவணங்களை இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கொழும்புத் தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கும்படி கொழும்பில் இருந்து அறிவிக்கப்பட்டுள்ளதாக வு் தெரிவிக்கப்பட்டது.

(ஐ—க)

# போத்தல் மூடி தட்டுப்பாட்டால் கள் உற்பத்தி பாதிப்பு

சண்டிலிப்பாய், ஜூலை 21

பண்டத்தரிப்பு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் நடத்தி வரும் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலையில் போத்தல் மூடிகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினால் உற்பத்தி ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. இந்த வருடத்தில் இத் தொழிற்சாலை மூலம் 50 ஆயிரம் போத்தலில் கள் அடைப்பதற்குத்திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் போத்தல்களுக்கான மூடிகள் கொழும்பிலிருந்து வந்து சேராததினால் குறித்த இலக்கை அடைய முடியாதுள்ளது. சுமார் 50 ஆயிரம் மூடிகள் அவசரமாகத் தேவைப்படுவதாகவும், சங்கங்களின் வலிகாமம் கொத்தணி மூலம் இவற்றைகொழும்பிலிருந்து கப்பல் மூலம் இங்கு கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சங்கத்தின் பொது முகாமையாளர் கி குணரத்தினம் இது பற்றித் தகவல் தருகையில் தெரிவித்தார். கடந்த 1999 ஆம் ஆண்டில் இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட 30 ஆயிரம் போத்தல் கள் சந்தைப்படுத்தப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-135)

# வீதிகள், பொதுக்கட்டடங்கள் திருத்த ரூ. 30 லட்சம் ஒதுக்கீடு

வலி. கிழக்கு, ஜூலை 21

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட 10 வீதிகள், 6 பொதுக் கட்டடங்கள் ஆகியவற்றைப் புனரமைக்க வடமாகாண புனர்வாழ்வு மீள்குடியமர்வு அதிகாரசபையினால் 30 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் மேற்கு உடையார் வீதி, கொக்குவில் மேற்குப் பிடாரி கோயில் மேற்கு வீதி, கொக்குவில் மேற்கு ஐயனார் வீதி, கொக்குவில் கிழக்கு பொற்பதி முதலாம் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு செம்பாடு வீதி, கொக்குவில் மேற்கு பொன்னையா வீதி, நல்லூர் வடக்கு கலைமகள் வீதி, கோண்டாவில் வடக்கு வீரபத்திரர் வீதி, கோண்டாவில் கிழக்கு நாராயணா குறுக்கு வீதி, கோண்டாவில் கிழக்கு குமர கோட்டம் வீதி ஆகிய 10 வீதிகளும்—

கொக்குவில் கிழக்கு சனசமூகநிலையம், கோண்டாவில் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், கோண்டாவில் ஞானவீர சனசமூக நிலையம், கோண்டாவில் மகராஜி சனசமூக நிலையம், கோண்டாவில் மேற்கு வேத பாராயணா சனசமூக நிலையம், திருநெல்வேலி பாரதி சனசமூக நிலையம் ஆகிய 6 சனசமூக நிலையங்களுமே 30 லட்சரூபா நிதி மூலம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இவற்றுக்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று பிரதேச சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ-180)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

சந்திரகாந்தன் கணநாதன் என்பவருடைய விசேட அ. அ. திருநெல்வேலி சந்தியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 41/73, செட்டியார் தோட்டம் முத்திரைச்சந்தி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றேன் (76576)

தம்பகாமம் பளையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கிருஸ்ணபிள்ளை என்பவரது சாவகச்சேரி மக்கள் வங்கிக்கு உரித்தான சேமிப்புப் புத்தகம் (இல-14869) 18-7-2000 அன்று ஆஸ்பத்திரி வீதிக்கும், யாழ் சிவன் கோவில் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பகலோன் களஞ்சியம் இல. 334, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (76561)

15-07-2000 சனிக்கிழமை அன்று கோண்டாவிலுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் ஆண்களுக்கான கறுப்புப்பட்டி கொண்ட கைக்கடிகாரம் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 'திருப்பதி ரெக்ஸ்' இல. 33, நவீன சந்தை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (76567)

51, சந்தனமாதா வீதி. சுண்டுக்குளி என்னும் முகவரியைச் சேர்ந்த ஞானஜோதி முத்துக்குமாரசாமி என்பவரது விசேட அ. அட்டை (090213740), 19-07-2000 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்காணும் முகவரியில் அல்லது ஜெ. முத்துக்குமாரசாமி இலங்கை வங்கி, 2 ஆம் கிளையில் ஒப்படைத்து உதவவும். (76581)

## விற்பனைக்கு

சுசுக்கி 125 - கொண்டா, 125 6 சிறி லாம்பிரட்டா 892, ஆகிய மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: S.சந்திரன் 390, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (76577)

## பொய்யாமொழி ஜோதிடம்

தடைப்படும் திருமணம் விரைவில் நடைபெற, வெளிநாட்டுப் பிரயாணத்தடை நீங்க ஆலோசனை வழங்கப்படும். சாதகத்துடன் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம் சனி, செவ்வாய்க்கிழமைகளில் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி, 140, பருத்தித்துறை வீதி, நல்லூரிலும் ஞாயிற்றுக்கிழமைகளில் மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்திலும் சந்திக்கலாம். (76542)

## SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலம் பயில தபால் மூலமும் பயிற்சி. ஆசிரியர் ந விக்னேஸ்வரன் ஆச்சாரி: 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை. (76538)

## இளைஞர் சுட்டுக்கொலை

வவுனியா மாவட்டம்—மகாஇறம்பைக்குளம் பகுதியில் கடந்தசெவ்வாய் இரவு இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நாகராசா (வயது 23) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். (ஐ-7)

# கண்ணீர் அஞ்சலி

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் உதவித் திட்டப் பணிப்பாளராகக் கடமையாற்றிய

## வேலுப்பிள்ளை கனகரட்ணம் (KANEKS)

18-07-2000 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகமும்
நலன்புரிச் சங்க உறுப்பினர்களும்.

சண்டிலிப்பாய் (76589)

# 3 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 19 — 10 — 1976



உதிர்வு 21 — 07 — 1997

## செல்வன் பத்மநாதன் முரளிகுமார்

(கொக்குவில் இந்து பழைய மாணவன்)

**திதி: 21-07-2000**

கரிகாலக் காலனவன் தனியாக அழைத்துத்
தெரியாமல் உமதின்னுயிரைக் கவர்ந்து - சென்றதை
எண்ணி நாம் தேம்புகின்ற வேளையெல்லாம்
கண்ணீர்ப் பூக்களையே காணிக்கையாக்குகின்றோம்.

சாயீசன் திருப்பாதத்தினைச் சரணடைந்த எம் செல்வக் குமாரனின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அப்பா, அம்மா, அக்கா,
அண்ணா, உறவினர்கள்.

உடுவில் கிழக்கு, சுன்னாகம். (76582)

# நல்லூர் ப. நோ. கூ. சங்கம் (வ-து)

## கூறுவிலை கோரல்

ஒரு அசோக் லைடன் பாரவூர்திக்கு உடற்கோப்பு அமைப்பதற்கு பின்வரும் விவரங்களின்படி கூறுவிலைகள் கோரப்படுகின்றன. நேர்கூலி முறையில் நிறைவேற்றப்படவுள்ள உடற்கோப்பு அமைப்புக்கான பொருள்கள் யாவும் சங்கத்தால் விநியோகிக்கப்படும்.

கூறுவிலைகள் 12—08—2000 சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக 'பாரவூர்தி உடற்கோப்பமைப்பு' என கடித உறையில் இடது புறத்தில் எழுதி 'பொது முகாமையாளர், நல்லூர் ப. நோ கூ. சங்கம், திருநெல்வேலி' என முகவரியிட்டு தபால் மூலமோ நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படலாம்.

பாரவூர்தி அடிச்சட்டத்தை அலுவலக நேரங்களில் சங்கக் காரியாலயத்தில் பார்வையிடலாம். மேலதிக விவரங்கள் தேவையெனின் இக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

1) கூலிக்கான கூறுவிலை
   - அ) உடற்கோப்பு அமைத்தல்
   - ஆ) உடற்கோப்புக்கான ரிங்கர் வேலை
   - இ) மின் இணைப்பு பொருத்துதல்
   - ஈ) தேவையான இரும்பு வேலை
   - உ) பெயின்ற் வேலை
   - ஊ) பெயர் எழுதுதல்

2) மரங்கள் விநியோகம்
   - அ) தேக்கமரம் 04 அடி சுற்றுக்கு மேல் 21 அடி நீளம்
   - ஆ) வாகைமரம் 05 அடி சுற்றுக்கு மேல் 08 அடி நீளம்
   - இ) வாகைமரம் 05 அடி சுற்றுக்கு மேல் 16 அடி நீளம்
   - ஈ) பலாமரம் 04 அடி சுற்று 12 அடி நீளம்

பொது முகாமையாளர்.

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். [சி/12276]

# ஈச்சமோட்டை, சுண்டிக்குளி மக்கள் மீளத் திரும்புகின்றனர்

ஈச்சமோட்டை, கொய்யாத்தோட்டம், சுண்டிக்குளிப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்து வருகின்றனர்.

இந்தப் பகுதிகளில் திருடர்களின் கைவரிசை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை அடுத்து இடம்பெயர்ந்த மக்கள் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பிச் செல்கின்றனர்.

பகல் வேளையில் தமது இருப்பிடங்களில் தங்கிவிட்டு மக்கள் இரவு நேரங்களில் வேறு இடங்களுக்குச் சென்று தங்கி வருகின்றனர். (ஐ-17)

# மக்கள் வங்கி அறிவித்தல்

## சாவகச்சேரி கிளை வாடிக்கையாளர் கவனத்துக்கு

காப்புறுதிக் கட்டணங்கள் செலுத்துதல் மற்றும் பண மாற்றங்கள் தொடர்பாக வாடிக்கையாளர்களினால் எமக்கு வழங்கப்பட்ட நிலையான கட்டளைகள் (STANDING ORDERS) போன்றவற்றை உரிய திகதிகளில் நடைமுறைப்படுத்துவதற்காக அவ்வாறு எமக்கு நிலையான கட்டளைகள் தந்தோர் உடன் எம்முடன் தொடர்பு கொண்டு விவரங்களைத் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வெளிநாட்டில் இருந்து பணம் தங்கள் பெயருக்கு வரும் என எதிர்பார்ப்புடன் இருப்போரும் எம்முடன் தொடர்பு கொண்டு எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள தொகைகள் தங்களுக்கு உரியதுதானா என்பதனை உறுதி செய்யுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் கணக்கிலிருந்து பணம் மீளப்பெற, விரும்பும்போது பற்று வரவு புத்தகத்தினை வங்கிக்குக் கொண்டு வருதல் வேண்டும்.

வங்கிச் சேவைகள் யாவும் வழமை போல் நடைபெறுகின்றன.

பிரதேச முகாமையாளர்
மக்கள் வங்கி
பிராந்திய காரியாலயம்,
யாழ்ப்பாணம்.

(சி/ 12277)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பராசக்தி கந்தையா (கனடா)

கருகம்பனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கனடாவில் வசித்து வந்தவருமாகிய திருமதி பராசக்தி கந்தையா 18-07-2000 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் கந்தையா (இளைப்பாறிய அதிபர், நகுலேஸ்வர மகாவித்தியாலயம் - கீரிமலை) அவர்களின் அன்பு மனைவியும், சங்கரப்பிள்ளை — தங்கப்பிள்ளை தம்பதிகளின் மகளும், வைத்திலிங்கம் — தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், மற்றும் கதிர்காமநாதன், தயாபரநாதன் (கனடா), ஈஸ்வரநாதன் (கனடா), ஈஸ்வரிதேவி (கனடா), ஆகியோரின் பாசமிகு தாயாரும், நாகம்மா, குலகுணசக்தி (கனடா), தாரணி (கொழும்பு), கிருஷ்ணமூர்த்தி [கனடா], கலா ஆகியோரின் அன்பு மாமியாரும் பொன்னம்பலத்தின் பெரியதாயாரும், அருள்மாறன், அருட்செல்வி, பிரசாந்த் ஆகியோரின் அருமைப் பேர்த்தியாரும், காலஞ்சென்றவர்களான ஈசானமூர்த்தி, சபாநாயகம், நீலாம்பிகை ஆகியோரின் சகோதரியும் மற்றும் சின்னத்தங்கம் விசுவநாதர் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (22-07-2000) நாளை சனிக்கிழமை கனடா ஒன்ரேறியோவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறேன்.

தகவல்:
க. கதிர்காமநாதன் (மகன்)
கருகம்பனை.

தற்போதைய முகவரி:-
வட்டு. இந்துக்கல்லூரி முன்பாக,
சித்தங்கேணி. (76594)

## திருமதி சரவணமுத்து ஆச்சிப்பிள்ளை

ஏழாலை கிழக்கைச் சேர்ந்த திருமதி சரவணமுத்து ஆச்சிப்பிள்ளை 19—07—2000 அன்று காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற சரவணமுத்துவின் அன்பு மனைவியும் பொன்னையா - சுப்பையா (நீர்வேலி), நல்லதம்பி, அன்னப்பிள்ளை, முத்தையா - தங்கம்மா, பொன்னையா - முருகேசு ஆகியோரின் சகோதரியும் சரவணமுத்து - கந்தவனம், திருமதி சுப்பிரமணியம் - தெய்வானை, சரவணமுத்து - சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புத் தாயாரும் வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் (யாழ். சின்னக்கடை பிரபல புகையிலை வியாபாரி), சிவபாக்கியம், சிவலோஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் (20—07—2000) நேற்று வியாழக்கிழமை பகல் 11மணியளவில் நடைபெற்று பூதவுடல் காடாகடம்பை குப்பிளான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ச. கந்தவனம்
(மகன்)

ஆத்ம ஜோதி,
ஏழாலை கிழக்கு, ஏழாலை. (76585)

## அதிரடி அரங்கு

இவ்வாரம் குடாநாட்டில் பரபரப்பை ஏற்படுத்திய விடயங்களில் முக்கியமானது யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சஞ்சீவனின் படுகொலையாகும்.

இம்மாணவனின் படுகொலை, இறுதி ஊர்வலம் போன்றவற்றை சம்பந்தப்பட்ட - சம்பந்தப்படாத பலதரப்புக்களும் தங்களுக்கு 'வாய்ப்பான' வகையில் பிடித்திழுத்து இழுபறிப்பட்டு அலங்கோலப்படுத்த, வழக்கமாக இத்தகைய விடயங்களில் கச்சையைக் கட்டிக் கொண்டு வரிந்து கட்டி ஆர்ப்பாட்டம் செய்யும் தமிழ்க் கட்சிகள் மட்டும் வலு அமசடக்காக - அமுக்கி - வாசித்தது ஏன் என்று பலதரப்பிலும் கேள்வி எழுப்பப்படுகின்றது.

சுட்டுக்கொல்லப்பட்ட மாணவன் விடுதலைப் புலிகள் தரப்பைச் சேர்ந்தவன் என்று இராணுவத்தரப்புக் கூறுகின்றது.

இராணுவத்தரப்பின் இக்கூற்று அப்பட்டமான பொய் என்கின்றது யாழ். கல்விச் சமூகம்.

இந்த விடயத்தில் யாழ்.கல்விச் சமூகத்தின் கருத்தோடு ஒன்றிநின்று குரல் எழுப்பினால் மக்கள் ஆதரவு கிடைக்கும் என்று தெரிந்தும் அந்தப் பக்கமோ, இந்தப் பக்கமோ அடையாளம் காட்டாமல் தமிழ்க் கட்சிகள் அடக்கி வாசித்தது ஏன்?

பொதுத் தேர்தல் நெருங்கும் சமயத்தில் குடாநாட்டில் பிரசாரத்துக்கும் ஏனைய வசதிகளுக்கும் பாதுகாப்புக்கும் அரசாங்கத்தரப்பையும் இராணுவத்தையும் நம்பியிருக்க வேண்டிய சமயத்தில் அந்த இரு தரப்புக்கும் எரிச்சலைத் தரும் விதமாக நடந்து கொண்டு அத்தரப்புக்களின் கோபத்தையும் எதிர்ப்பையும் சம்பாதித்துக் கொள்ள அவை விரும்பாததே காரணம் என்று கூறப்படுகின்றது.

* * * *

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு பிரபலமான இந்துக் கோவிலின் தேவஸ்தானத்தின் பெயரில் 'உதயன்' பத்திரிகையில் பிரசுரமான விளம்பரம் ஒன்று இந்துக் குருமார் பலரையும் அதிருப்திக்கும் விசனத்துக்கும் உள்ளாக்கியிருப்பதாகத் தெரியவருகின்றது.

"ஐயர்மார் தேவை" என்ற தலைப்பில் தமது ஆலயத்தில் ஐயர்மார் பதவிக்கு வெற்றிடம் நிலவுவதால் தகைமையுடையோர் சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்கலாம் என சம்பந்தப்பட்ட தேவஸ்தானத் தலைவர் அந்த விளம்பரத்தில் குறிப்பிட்டிருந்தார்.

அர்ச்சகர்களுக்கு சிவாச்சாரியார்கள், குருமார்கள், அந்தணர்கள் என நல்ல சொற்பதங்கள் இருக்க "ஐயர்மார்" என்ற பதம் பயன்படுத்தப்பட்டமையே இந்துக்குருமாரின் மனதைப் புண்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

அந்தணப் பெருமக்களுக்கு மனவேதனையை ஏற்படுத்தும் எண்ணம் அல்லது நோக்கம் சம்பந்தப்பட்ட தேவஸ்தானத் தலைவருக்கோ ஏனையோருக்கோ இருந்ததாக யாரும் கருதத் தேவையில்லை. எனினும் சரியான சொற்பதத்தைப் பயன்படுத்தாமல் விட்டது தவறானது என்றால் அதைத் திருத்திக் கொள்ளலாம்; இனிமேல் அத்தகைய பதத்தைப் பயன்படுத்தாமலும் விடலாம்.

'சரி விளம்பரம் கொடுத்த தேவஸ்தானத் தலைவருக்கு தான் பயன்படுத்தும் சொல் தவறானது என்று தெரியாமல் இருந்திருக்கும். தமிழ்ப் பத்திரிகை நடத்தும் உதயன் ஆசிரியர்பீடத்தினரும் அந்தச் சொல்லை அனுமதித்திருக்கலாமா?' என்று சற்றுக் கோபத்துடன் கூறுகின்றார் ஓர் அந்தணர்.

பத்திரிகையில் பிரசுரமாகும் ஒவ்வொரு 'சொல்' குறித்தும் பத்திரிகைகள் அவதானமாக இருக்க வேண்டும் என்பது வாஸ்தவம்தான்.

* * * *

தொலைபேசி விவகாரம், தொலைபேசிப் பாவனையாளர்கள் ஒன்றுகூடி ரெலிக்கொம்முக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய்வது வரை சென்றுள்ள நிலையில் வேறு ஒரு தகவல் இது:-

கடந்த டிசெம்பர் வரை தொலைபேசிக் கட்டணத்தில் பெரும் தொகைப் பணத்தை நிலுவையாகச் செலுத்த வேண்டியிருந்த 192 தொலைபேசி இணைப்புக்கள் வெட்டப்பட்டுள்ளன. இவற்றுள் 170 இணைப்புகள் யாழ்ப்பாணத்தையும் சுற்றுப்புறங்களையும் சேர்ந்தவை. 22 இணைப்புகள் பருத்தித்துறை பரிவர்த்தனை நிலையத்துக்கு உட்பட்டவை.

கடந்த டிசெம்பர் வரை இந்த இணைப்புகளுக்கு உரியவர்கள் செலுத்த வேண்டிய கட்டணம் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமாம்.

மார்ச் மாதத்தில் இவர்களுக்கு எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

அப்படியும் செலுத்தத்தவறியவர்களுக்கு மே மாதம் முதல் புதிய தொலைபேசி அழைப்புக்களை எடுக்கும் வசதி வெட்டப்பட்டது. எனினும் வரும் அழைப்புக்களை **(In coming Calls)** பேசும் வசதி வழங்கப்பட்டது.

அதன் பின்னரும் நிலுவைகளைச் செலுத்தத் தவறிய 192 பேரின் இணைப்புக்களே தற்போது வெட்டப்பட்டுள்ளன. இவர்கள் தமது நிலுவைகளைச் செலுத்தத் தொடர்ந்து தவறினால் இவர்களது இலக்கங்கள் வேறு பாவனையாளர்களுக்கு வழங்கப்படும் என்கின்றன ரெலிக்கொம் வட்டாரங்கள்.

ஆரம்பத்தில் பணத்தைச் சுளையாகத் தள்ளி இணைப்பைப் பெற்றுக் கொண்ட பெரும் 'முத(லாளி/லை)கள்' மக்களுக்குத் தொலைபேசி அழைப்புகளைக் கொடுத்து பணத்தை வாரிச் சுருட்டிக் கொண்டு ரெலிக்கொம்முக்கு கட்டணம் கட்டாமல் ஏப்பம் விட்டுவிட்டதாகத் தகவல்.

கொடுத்த பணத்தைப் போல பல மடங்கு சுருட்டிக் கொண்டு விட்டதால் இனிமேல் இணைப்பு இருந்தென்ன, துண்டிக்கப்பட்டென்ன என்ற மிதப்பே காரணம் என்று பேசிக்கொள்கிறார்கள்.

பாவம் காலம் பிந்தி - காசு செலவிட்டு - இணைப்புப் பெற்றவர்கள். கட்டணத்தைக் கட்டி விட்டு உள்ளூர் அழைப்பு வசதியை மாத்திரம் பெற்றுக் கொண்டு தொலைபேசியைக் கட்டி அழுகின்றார்கள் அவர்கள்.

– மின்னல்


## பிரிவுபசார வைபவம் திகதி மாற்றம்

**22-07-2K அன்று நடைபெறவிருந்த யாழ். பல்கலைக்கழக கலைப்பீட இறுதி வருட 'B' பிரிவு மாணவர்களுக்கான பிரிவுபசார வைபவம் *23-07-2K ஞாயிற்றுக்கிழமை* காலை 10.00 மணிக்கு மாணவர் பொது அறையில் நடைபெறும். 'B' பிரிவு மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும்.**

இறுதி வருட 'B' பிரிவு
பிரதிநிதி.

(C/12278)



## சனிமாற்றம் எங்கும் விற்பனையாகின்றது

மகாதேவா ஜோதிடம்

(C/12280)


## இறந்தவர் அடையாளம் காணப்பட்டார்

நேற்று முன்தினம் காலை கரணவாய் மணியகாரன் தோட்டம் பகுதியில் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டில் பலியானவர் சாவகச்சேரி வடக்கு சோலையம்மன் வீதியைச் சேர்ந்த தேவராஜன் ரேமன் ராஜகுலநாதன் (வயது 26 - ஒரு பிள்ளையின் தந்தை)என்று அவரது மனைவி நேற்று மந்திகை சவச்சாலையில் அடையாளம் காட்டினார்.

மரணவிசாரணை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் பதில் நீதிவான் திருமதி.விஜயராணி உருத்திரேஸ்வரன் முன்னிலையில் நடைபெற்றது.

இறந்தவரின் மனைவி ராஜகுலநாதன் தயாளினியும்(வயது26) பேர்த்தி முறையான வீரசிங்கம்-கைம்பெண் சின்னம்மாவும்(வயது65) சாட்சியமளித்ததையடுத்து கொலை என்று தீர்ப்பளித்த நீதிவான் சடலத்தை மனைவியிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (இ-109)

## சிப்பாய்கள் விளக்கமறியலில்

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த இரும்புப் பெட்டகத்திலிருந்து 50 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான நகைகளையும்,பணத்தையும் சூறையாடியதாகச் சந்தேகிக்கப்படும் இரண்டு சிப்பாய்களை இருவார காலம் விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி மாவட்ட நீதிவான் நேற்றுக் காலை உத்தரவிட்டார்.

நாகர்கோவில் இராணுவ முகாமைச் சேர்ந்த குறித்த இரு சிப்பாய்களும்,இரும்புப் பெட்டகத்தை பாடசாலையிலிருந்து தூக்கிச் சென்று சில மைல் தூரத்தில் வைத்து அப்பெட்டகத்திலிருந்த நகை,பணம் போன்றவைகளை சூறையாடியதாக கொடிகாமம் பொலிஸாரினால், சாவகச்சேரி நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த சம்பவம் தொடர்பாக குறித்த இரு இராணுவசிப்பாய்களும் நேற்றுக்காலை சாவகச்சேரி மாவட்ட நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட சமயம், ஒகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (இ-109)

## யெகோவா சாட்சிகள் மாநாடு

யெகோவாவின் சாட்சிகளுடைய வட்டார மாநாடு நாளையும்,நாளை மறுதினமும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலையில் நடைபெறும்.

"கடவுளின் வழியில் நடந்து இப்பொழுதே பயன் பெறுங்கள்"என்ற பொருளில் நடைபெறும் இந்த மாநாடு தினமும் காலை 9மணி முதல் ஆரம்பமாகி நடைபெறும். (இ-7)

## போட்டிப் பரீட்சைகள்

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவைக்கு பின்வரும் பதவிகளுக்கான திறந்த போட்டிப் பரீட்சைகள் வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளன. இப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் குறித்த பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் தெரிவித்தார்.

இலங்கை தொழில் நுட்பவியல் சேவையில் விவசாயப் போதனாசிரியர் வகுப்பு II 'ஆ' பிரிவுக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் 29 ஆம் திகதியும் -

இலங்கை உள்ளூராட்சித் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர் பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2000, எதிர்வரும் 30 ஆம் திகதியும் - நடைபெறவுள்ளன. (ஐ-9)

## ஒத்திவைப்பு

கிராம அலுவலர்களை வகுப்பு ஒன்றுக்கு பதவி உயர்வு செய்வதற்காக நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படவிருந்த நேர்முகப் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன.

இவை முறையே எதிர்வரும் 26,27,28,29 ஆம் திகதிகளில் நடைபெறும் என்றும்-

தென்மராட்சி(சாவகச்சேரி)பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கிராம அலுவலர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாகவும் யாழ் செயலக நிர்வாகசேவை உத்தியோகத்தர் தெரிவித்தார். (இ-9-5)

## அமைச்சர்கள் மட்ட குழு நியமனம்

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தொழிற்சங்க நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கென அமைச்சர்கள் மட்டக் குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தக் குழுவை நியமனம் செய்துள்ளார்.

அமைச்சர் டபிள்யூ.டி.ஏ. செனிவிரட்ன தலைமையில் இயங்கும் இந்தக் குழுவில் அமைச்சர்களான மகிந்த ராஜபக்ஷ, அலவி மௌலானா மற்றும் பிரதி அமைச்சர்களான றெஜி ரணதுங்க,பெனட் குரே ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (இ-7)


# JAFFNA CENTRAL COLLEGE

## 184th

## ANNIVERSARY CELIBRATIONS

GEORGE WEBSTER TROPHY

*(Who introduced the game of Cricket for the first time in Jaffna.)*

**Six - A - Side Six (6) Overs Cricket Tournament**

SPONSORED BY JAFFNA CENTRAL COLLEGE OLD BOYS ASSOCIATION.
ORGANISED BY CENTRALITES SPORTS CLUB.

***Entries Closed on 23.07.2000 (Sunday)***

**Draw 25.07.2000 (Tuesday) at 4.00pm. at Jaffna Central College.**

*The Matches will be held on*

**29.07.2000(Saturday)**
**30.07.2000 (Sunday)**
**01.08.2000(Tuesday)**

Contact :-

**S.Vimalathasan.**
*Cricket Secretary*
*Centralites Sports Club*
*Jaffna.*

**S.Premkumar.**
*Secretary*
*Jaffna Central College*
*Old Boys Association.*

(C/12282)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில் 26 - 07 - 1953



பாதகர் பறிப்பில் 07 - 06 - 2000

அமரர்

### அரியரத்தினம் சுந்தரநேசன்

(அரியரத்தினம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்,மாத்தறை)

உங்கள் பொன் சிரிப்பையும் அன்பான பேச்சையும், பொறுக்கமுடியாத காலன் உங்களை அழைத்து 45 நாள்கள் ஆகியும் 45 வினாடிகள் போன்றே உள்ளது. எல்லோரையும் கலங்க வைத்துவிட்டு நீங்கள் நிம்மதியாய் தூங்கி விட்டீர்கள் எத்தனை ஆண்டுகள் சென்றாலும் ஆறாது எம் துயரம்.

*உங்கள் பிரிவால் துயருறும்*

**மனைவி,**
**பிள்ளைகள்.**

*66/12, இந்து மகளிர் கல்லூரி வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*

(76605)


## யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்

## கலந்துரையாடல்

எதிர்வரும் 23.07.2000 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு சங்கத் தலைவர் திரு.வீ.குமாரசாமி அவர்கள் தலைமையில் கொக்குவில் கிழக்கு ஸ்ரீ கற்புலத்து மனோன்மணி சனசமூக நிலைய மண்டபத்தில் ஒரு கூட்டம் நடைபெறும். சகல உரிமையாளர்களையும் சாரதிகளையும் தவறாது பங்கு பற்றி புதிய நிர்வாக உறுப்பினர்களிடம் தங்களது ஆலோசனைகளை வழங்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

நிகழ்ச்சி நிரல்

1. கடவுள் வணக்கம்
2. தலைவர் உரை
3. நலன்புரிக்கழகம் அமைத்தல்
4. நன்றி உரை

இ.அரிகரன்
கௌரவ செயலாளர்

(76601)

# இடம்பெயர்ந்த மக்கள் உடைமைகளை மீட்க ஒரு வார காலம் யுத்தநிறுத்தம் செய்க!

## சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் ஜனாதிபதியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை21

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தமது உடைமைகளையும் ஆவணங்களையும் மீட்க வசதியாக ஒருவாரத்துக்கு யுத்த நிறுத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சாவகச்சேரி பிரதேசசபைத் தலைவர் அன்ரன் பொன்னையா ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

ஜனாதிபதிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எந்தத் தவறும் செய்யாத தென்மராட்சி மக்களின் துயரங்கள் இழப்புக்கள் பற்றிக் கூறவிரும்புகிறேன். அந்த மக்கள் தமது உடைமைகளையும் ஆவணங்களையும் எடுக்க வசதியாக யுத்த நிறுத்தம் செய்யுமாறு கோருகிறேன்.

திடீரென,எதிர்பாராமல் ஏற்பட்ட யுத்தத்தால் சீரகுலைந்த தென்மராட்சியில் இருந்து மக்கள் உடுத்த உடையுடன் குழந்தைகளையும் வயோதிபர்களையும் அணைத்தபடி வலிகாமத்துக்கு இடம்பெயர்ந்தனர்.

இந்த யுத்தத்தில் பலர் இறந்துள்ளனர்; பலர் காயமடைந்துள்ளனர்; சிலர் காணாமற்போயுள்ளனர்.

அங்கு இயங்கிய வங்கிகளும் கூட்டுறவுச் சங்கங்களும் தனியார் வர்த்தக நிறுவனங்களும் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை விட்டுள்ளனர். அதுபோல பொது மக்களும் தமது ஆவணங்களையும் விலை உயர்ந்த பொருள்களையும் விட்டுவந்துள்ளனர்.

எனவே அவர்கள் தமது உடைமைகளை மீட்க வசதியாக ஒருவார கால யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும் - என்றுள்ளது.

(இ-ஒ-3)

# ஜீ.சீ.ஈ சாதாரணப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்ற பாடசாலையாக யாழ்.இந்து

திருகோணமலை,ஜூலை21

கடந்த ஆண்டு ஜி.சீ.ஈ. (சாதாரண) பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் சிறந்த பெறுபேறு பெற்ற பாடசாலையாக யாழ்.இந்துக் கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது;.

வடக்கு-கிழக்கில் உள்ள ஒன்பது கல்வி மாவட்டங்களிலும் வசதிகள் கொண்ட ஒன்பது பாடசாலைகளும் வசதி குறைந்த ஒன்பது பாடசாலைகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ் மாவட்டத்தில் சகல வசதிகள் கொண்ட பாடசாலையாக யாழ்.இந்துக்கல்லூரி தெரிவு செய்யப்பட்டு கணனி ஒன்று பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

வசதிகள் குறைந்த படசாலையாக அல்லைப்பிட்டி ஜி.ரி.எம். பாடசாலை தெரிவுசெய்யப்பட்டு வானொலி பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான பரிசளிப்பு வைபவம் செவ்வாயன்று மாகாணக்கல்வியமைச்சில் இடம்பெற்றது. (இ-3)

## விளையாட்டரங்கு

### இலங்கை -341

கொழும்பு,ஜூலை21

காலி சர்வதேச விளையாட்டரங்கில் நேற்று ஆரம்பமான இலங்கை -தென்ஆபிரிக்க அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்டின் முதலாவது ஆட்ட நேர இறுதியில் இலங்கை அணி 5 விக்கெட் இழப்புக்கு 341 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை அணிக்காக அணித் தலைவர் சனத் ஜெயசூரிய 148 ஓட்டங்களையும் மஹெல ஜெயவர்த்தன ஆட்டமிழக்காது 78 ஓட்டங்களையும், மார்வன் அத்தப்பத்து 54 ஓட்டங்களையும் பெற்றனர்.

தென்னாபிரிக்க அணியின் பந்து வீச்சில் போல் அடம்ஸ் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். ஆட்டம் இன்று தொடரும். (இ-4)

★ ★ ★

### ரணதுங்க ஓய்வு

நடைபெற்றுவரும் இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான ரெஸ்ட் தொடரின் முடிவில் இலங்கை அணியின் மூத்த வீரரான அர்ஜுன ரணதுங்க ஓய்வுபெறப் போவதாக கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு கடிதம் ஒன்றை நேற்று அனுப்பியுள்ளார்.

இலங்கை அணியின் முதலாவது, நூறாவது ரெஸ்ட் போட்டிகளில் விளையாடிய ஒரே வீரரான ரணதுங்கவின் தலைமையிலேயே 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை இலங்கை தனதாக்கியது தெரிந்ததே. (இ-4)

★ ★ ★

### கிரிக்கெட் வீரர்களின் வீடுகளில் சோதனை

புதுடில்லி,ஜூலை21

இந்தியக் கிரிக்கெட் வீரர்களின் வீடுகள் மற்றும் பந்தய நிலையங்களில் வருமான வரித்துறையினரும் சி.பி.ஐ.அதிகாரிகளும் நேற்றுத் தேடுதல் நடத்தினர்.

நேற்றுக் காலை நடத்தப்பட்ட இந்தத் தேடுதலில் கிரிக்கெட் வீரர்களினால் வெளியிடப்படாத சொத்துக்களின் விவரம் தொடர்பாக ஆராயப்பட்டதாக வருமான வரித்துறை அதிகாரி தெரிவித்தார்.

மொஹமட் அஸாருதீன், கபில் தேவ், அஜய் ஜடேஜா, நிக்கல் சோப்றா, அஜேஸ் சர்மா, மொங்கியா ஆகியோரது வீடுகளும் ஆறு பந்தயநிலையங்களுமே நேற்று சோதனையிடப்பட்டவையாகும். (இ-4)

# கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட நால்வர் தாக்குதலில் காயமடைந்தனர்

## நயினாதீவில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜூலை21

நயினாதீவில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் நால்வர் காயமடைந்து நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நயினாதீவில் இளைஞர் ஒருவரின் மரணத்தை அடுத்து பொலீஸாரினால் இந்த நால்வரும் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர் என்றும் -

இவர்கள் விடுவிக்கப்பட்டதை ஆட்சேபித்து ஊர்வலமாக வந்தவர்களே இந்த நால்வரையும் தாக்கி இவர்களின் வீடுகளையும் சேதப்படுத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் மனோகரன் (வயது18) என்பவர் கடந்த 18 ஆம் திகதி மர்மமான முறையில் கழுத்தில் சுருக்கிட்டு மரணமான நிலையில் வீடொன்றில் சடலமாக கண்டுபிடிக்கப்பட்டார்.

இவரது மரணம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இதே இடத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் கலாநாதன் (வயது39), தாமோதரம்பிள்ளை மகேஸ்வரன் (வயது45),தியாகராசா இளங்குமரன்(வயது31) ஆறுமுகம் தியாகராஜா (வயது63) ஆகியோர் ஊர்காவற்துறை பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இவர்களுக்கு எதிராக நேற்றுத் திரண்டவர்கள் ஊர்வலமாகச் சென்று இவர்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள் என்று கூறப்படுகிறது.

இந்த இளைஞனின் மரணத்துக்கு ஆட்சேபனை தெரிவித்து நேற்று நயினாதீவுப் பகுதி மீனவர்கள் கடற்றொழிலுக்கு செல்லாமல் பகிஷ்கரித்தனர். (இ-5-9)

# இராணுவ மேஜர் கைது புலிகளுக்கு உதவினாராம்

விடுதலைப்புலிகளுக்குத் தகவல் வழங்கி வந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் இராணுவ மேஜர் ஒருவர் கடந்த புதன்கிழமை இராணுவப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹோமகமவில் உள்ள அவரது வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்ட இவர் தற்சமயம் விசாரணைக்குள்ளாக்கப்பட்டுள்ளார்.

புலிகளுக்குத் தகவல் கொடுப்பதற்காக அவர்களிடமிருந்து இரண்டு பிஸ்ரல்களையும் ஒரு லட் சம் ரூபா பணத்தையும் இவர் பெற் றிருந்தார் என்பது விசாரணையி லிருந்து தெரியவந்துள்ளதாக இரா ணுவப் பொலீஸார் தெரிவித்தனர். (இ-3-7)

# திருமலை மாவட்டத்தில் ஈ.பி.டி.பி தனித்துப் போட்டி

எதிர்வரும் பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் ஈ.பி.டி.பி. தனித்துப் போட்டியிடவிருப்பதாக அந்தக்கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.புஸ்பராசா தெரிவித்துள்ளார்.

மூவின மக்களும் வாழும் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் தமது பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக 94 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் அங்கு போட்டியிடுவதைத் தவிர்த்திருந்தோம். எனினும் கடந்த காலங்களில் நிகழ்ந்த கசப்பான அனுபவங்களை அடுத்து தமிழர் பிரதிநிதித்துவம் கைமாறாமல் இருப்பதற்காக இந்தத் தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ளோம்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

### பதிவுகளை மேற்கொள்ள கோரிக்கை

தென்மராட்சி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் இருந்து வலிமேற்கு பிரதேசத்துக்கு இடம்பெயர்ந்த மக்கள் பிரதேசசபையின் சங்கானை,சுழிபுரம்,வட்டுக்கோட்டை அராலி உப-அலுவலகங்களில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அந்தப்பிரதேச சபையின் தலைவர் என். திரிலோகநாதன் கேட்டுள்ளார்.

### ஐ.தே.க. கோரிக்கை

"வாழ்க்கைச் செலவு மிகவேகமாக உயர்ந்துவிட்டது. அதைச் சமாளிக்கமுடியாமல் அரச ஊழியர்கள் திணறுகின்றார்கள். எனவே எதிர்வரும் முதலாம் திகதி முதல் அரச ஊழியருக்கு வழங்க இணக்கம் காணப்பட்டுள்ள அறுநூறு ரூபா மேலதிகக் கொடுப்பனவை இரண்டாயிரம் ரூபாவாக அரசு உயர்த்த வேண்டும்" - இவ்வாறு ஐ.தே.கட்சி அரசைக் கோரியுள்ளது. (உ)

### திருச்சியில் தமிழர் ஆதரவு மாநாடு

"ஏன் வேண்டும் இன்பத் தமிழீழம்" என்ற பொருளில் நாளை சனிக்கிழமை திருச்சியில் முழுநாள் மாநாடு நடைபெறவுள்ளது.

உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் தமிழக அறிஞர்கள் பலரும் கலந்து கொள்வர் என தெரிவிக்கப்பட்டது. (இ-7)

### வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பஸ்ஸை இடைமறித்த இருவர் பயணிகளை இறக்கிவிட்டு பெற்றோல் ஊற்றி கிரனேட்டை வெடிக்க வைத்து பஸ்ஸை எரித்ததாகவும்-

பஸ் முற்றாக எரிந்து நாசமாகியது என்றும்-தெரிவிக்கப்பட்டது.

அறுபது இருக்கைகளைக் கொண்ட இந்த பஸ்ஸின் பெறுமதி 16 லட்சம் ரூபா எனக் கூறப்பட்டது.

இப்பகுதிக்கு முன்னர் பஸ் சேவை இடம்பெறுவதில்லை எனவும் -

பாடசாலை மாணவர் ஓட்டோ மூலமே பயணம் செய்வார்கள் என்றும் -

இந்த பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் ஓட்டோ சாரதிகள் பாதிக்கப்பட்டிருந்தனர் என்றும் கூறப்பட்டது. (இ-3-164)

### தேக்கநிலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்க் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆயினும் ரெலோவுக்கு அழைப்புக் கிடைக்கவில்லை.

இதன் பின்னர் பிற்பகல் 3மணிக்கு ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.க. தூதுக்குழுவை ஜனாதிபதி சந்திக்கவுள்ளார்.

அரசு - ஐ.தே.க. - தமிழ்க்கட்சிகள் என முத்தரப்புக்களும் பங்குபற்றும் பேச்சுவார்த்தையை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடத்துவது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியுடனான கலந்துரையாடல்களில் ஆராயப்படவிருக்கின்றது.

இரண்டு தரப்புக்களுடனுமான பேச்சுக்களில் ஜனாதிபதியுடன் அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், பட்டி வீரக்கோன், எம்.எச்.எம். அஷ்ரப், இந்திக குணவர்த்தன ஆகியோர் பங்குபற்றுகின்றனர்.

அதேசமயம் - ஜனாதிபதியுடனான சந்திப்பில் தமது 'கட்சி தனியாகப் பேசவிருக்கின்றது என்றும் -

ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் சேர்ந்து பங்குபற்றமாட்டாது என்றும்- தமிழர் விடுதலைக் கூட்டணி சிரேஷ்ட துணைத்தலைவர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

(இ-க-3-7)

### தீர்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கங்கள் என்பவற்றோடு பேச்சுவார்த்தை நடத்தியது. ஆனால் மகாசங்கத்துடனோ, 74 சதவீத பௌத்த மக்களின் பிரதிநிதிகளுடனோ இதுவரை பேச்சு நடத்தவில்லை.

இத்தகைய நடவடிக்கைகள் சிங்கள மக்களை அவமதிப்பனவாகவே அமைந்துள்ளன. ஆகையால் உத்தேச அரசமைப்புக் குறித்து அரசாங்கம் பிக்குமாருடன் பேச்சு நடத்தவேண்டும்.

அத்துடன் சர்வசன வாக்கெடுப்பு நடைபெற்றால் அதற்கு எதிராக வாக்களிக்குமாறு மக்களை வலியுறுத்துவோம் - என்று அறிக்கை கூறுகின்றது. (அ-7)

### நல்லூர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரியபுலம் மகாவித்தியாலய ஆசிரியர் ப.இராமகிருஷ்ணன் (வயது33), யாழ்.கனகரத்தினம் மகாவித்தியாலய உயர்வகுப்பு மாணவன் தி.சேந்தன் (வயது20) ஆகிய மூவருமே இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களாவர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த தி.சேந்தன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-5-9-10-15-86-111-139-173)


BARATHY

சித்தன்கேணி

A/L 2002,2001

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன

| | |
|---|---|
| Eco. | சண் |
| Com. | பசில் |
| Acc. | B.முகுந்தன் |
| Log. | R.P.சர்மா |
| Tam. / H.c. | N.பாலா |
| Eng. | விஜயபாஸ்கர் |
| R.c. | ரவீந்திரன் |
| Geo. | குமரன் |
| Dam | சுதன் |
| H.m | N.T.தரன் |

சித்தன்கேணியில் தனித்துவமும் திறமையும் கொண்ட ஆசிரியர் குழுவினால் கற்பிக்கப் படுகின்ற நிறுவனம் இது மட்டுமே. (76266)

பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

A/L 2002

பொருளியல் - S.வரதராஜன்.

சனி - ஞாயிறு

பிரிவு I - 09-10

பிரிவு II - 10-11

குறிப்பு :- இடநெருக்கடி காரணமாக விரைவில் அனுமதிகள் மட்டுப்படுத்தப்படவுள்ளன. (76266)

புதிய வீடியோ CD வெளியீடுகள்

சரத்குமார், பிரபுதேவாவின்

★பெண்ணின் மனதைத் தொட்டு

சாய்குமார், அருண்பாண்டியன், ஆனந்தராஜின்

★இண்டிப்பெண்டன்ஸ்

★இந்தப் படை போதுமா

★மகளிர்க்காக (பீரமிட் CD)

வீடியோ விமல்

யாழ்ப்பாணம். (C/12281)

ST. PATRICK'S COLLEGE

முக்கிய அறிவித்தல்

பழைய மாணவர்கள், பெற்றோர்கள் கவனத்துக்கு,

இன்று (21.07.2000) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகவிருந்த "150 ஆம் ஆண்டு ஞாபகார்த்த அஞ்சல் முத்திரை" வெளியீட்டு விழா, பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகும் என்பதை அறியத்தருகின்றோம்.

(C/12379) - அதிபர் -

யாழ். வைத்திய நிலையம்

வேம்படி - யாழ்ப்பாணம்

(Nursing Home and Pharmacy)

வெளி நோயாளர் பிரிவு மட்டும்

காலை 9.00 - 12.00

மாலை 2.30 - 4.30

(76660) - நிர்வாகி


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்(பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21-07-2000இல் அச்சி...